உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 27 ஞாயிற்றுக்கிழமை (09-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:115

## டோறாப் படகுகள் மூழ்கடிப்பு
# உயிர் தப்பியோரை கண்டுபிடிக்க முயற்சி!

## 16 பேர் பற்றித் தகவல் இல்லை என்று படையினர் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,ஏப்ரல்9

**நாகர்கோயில் கடற்பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் கடற்புலிகள் நடத்திய தாக்குதலின்போது மூழ்கடிக்கப்பட்ட டோறாப் படகுகளில் இருந்த கடற்படையினரில் காணாமல்போனவர்களைத் தேடும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.**

இந்த இரு டோறாப் படகுகளிலும் 35 கடற்படையினர் கடமையில் இருந்தனர் என்றும் -

அவர்களில் 19 பேர் மீண்டும் பாதுகாப்பாகக் கடற்படைத் தளங்களுக்குத் திரும்பிவிட்டனர் என்றும்-

16 பேரைக் காணவில்லை என்றும் -

கொழும்பில் கடற்படை வட்டாரங்கள் நேற்று இரவு தெரிவித்தன.

நாகர்கோயில் கடற்கரையோரங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் விமானங்கள் நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை 8.00 மணிமுதல் 10.00 மணிவரை இரண்டு தடவைகள் கிபிர் விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடத்தின.

நேற்றுமுன்தினம் கடற்படையின் 2 டோறாப் படகுகள் தாக்கப்பட்ட கரையோரப் பகுதிகளிலேயே இந்தக் குண்டுவீச்சு நடத்தப்பட்டது. தொடர்ந்து ஹெலிகொப்டர்களும் இப்பகுதியில் தாக்குதல்களை நடத்தின. சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (இ-15-4)

## அம்பனிலிருந்து பலர் இடம்பெயர்ந்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

நேற்றுமுன்தினம் மாலை நாகர்கோயில் கடல் பகுதியில் கடற்படையினரின் இரண்டு டோறாப் படகுகள் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நிலவிய பதற்றம் காரணமாக அம்பன் பகுதி மக்கள் நேற்று பெரும் அளவில் அப்பகுதியைவிட்டு வெளியேறினர்.

வெளியேறியோரில் பலர் வடமராட்சிப் பகுதிக்குச் சென்றதாகக் கூறப்பட்டது. (இ-15-4)

## தப்பிய சிப்பாய்களில் ஒருவர் 6மணி நேரம் நீந்தி வந்தார்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.9

தாக்குதல் இடம்பெற்ற சமயம் டோறாப் படகு ஒன்றிலிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் ஆறு மணி நேரம் நீந்தி நாகர் கோயிலுக்கு வடக்கே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பன் பகுதியில்கரை சேர்ந்தார்.

மிஹிந்தலையைச் சேர்ந்த எஸ். செனிவிரட்ண (வயது 21) என்ற இந்தச் சிப்பாய் அம்பனில் இருந்து பஸ் எடுத்து வல்லிபுரக் கோயில் முகாமைச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு அவர் தெரிவிக்கையில், தமது டோறாப் படகில் மட்டும் தம்முடன் 22 கடற்படைச் சிப்பாய்கள் இருந்தனர் என்றும்-

தன்னுடன் இன்னும் ஒருவர் நீந்திவந்தார் என்றும் -

எனினும் அவர் கரை சேரவில்லை என்றும் - கூறினார்.

இந்தக் கடற்படைச் சிப்பாய் பின்னர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குப் பின்னர் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டார். (இ-6-5-4)

## ஐரிஷ்மோனா கப்பல் மாலுமி நாளை புலிகளால் விடுவிப்பு

கொழும்பு,ஏப்ரல்9

முல்லைத்தீவுக் கடலில்வைத்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஐரிஷ்மோனா கப்பல் மாலுமி ஒருவர் நாளை மல்லாவியில் வைத்து விடுவிக்கப்படவுள்ளார்.

சுகயீனமுற்ற நிலையிலிருக்கும் இவரது உடல் நலம்கருதி இவரை விடுவிக்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடுதலைப் புலிகளிடம்விடுத்த வேண்டுகோளையடுத்தே மனிதாபிமான அடிப்படையில் இவரை விடுவிக்க விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தனர்.

கப்பல் மாலுமியான விஜயக்கோன் ஹேரத் முதியான்சலாகே ஜெயவீர பண்டார என்பவரே விடுவிக்கப்படவுள்ளவராவார்.

1995ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் வைத்து 40 பயணிகளுடனும் 8 கப்பல் சிப்பந்திகளுடனும் ஐரிஷ்மோனா கப்பல் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது.

இக்கப்பலில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் 1995 ஒகஸ்ட் 30ஆம் திகதியும் -

கப்பலிலிருந்த 3 தமிழ் சிப்பந்திகள் 1995 ஒக்டோபரிலும் - விடுவிக்கப்பட்டனர்.

1998 ஒக்ரோபர் 24ஆம் திகதி ஒரு கப்டனும் சிப்பந்தி ஒருவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (இ-5)

## திருமலையிலிருந்து 1,200 பேருடன் லங்கா முடித்த இன்று புறப்படுகின்றது

திருகோணமலை,ஏப்ரல்9

திருகோணமலையிலிருந்து ஆயிரத்து 200 பயணிகளுடன் லங்கா முடித்த கப்பல் இன்று காங்கேசன் துறை நோக்கி புறப்படவுள்ளது.

இன்று பகல் 2.00 மணிக்கு அங்கிருந்து புறப்படும் இந்தக் கப்பல் நாளை திங்கட்கிழமை காங்கேசன் துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று திருகோணமலை துறைமுகத்தை பகல் 2.00 மணிக்கு சென்றடைந்த இந்தக் கப்பலிலிருந்து 5.00 மணிக்குப் பின்பே பயணிகள் இறங்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடும் சோதனையின் பின்னரே பயணிகள் இறங்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



நல்லூர் கோவில் வீதியில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் முன் பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டிருப்பதையும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக யாழ் வதிவிடப் பிரதிநிதி ஜோன் டிக்ஷனிடம் மகஜர் சமர்ப்பிப்பதையும் படங்களில் காணலாம்.

## பல்கலைக்கழக மாணவர் நேற்று மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

யுத்தம் நடைபெறும் பளை மற்றும் அயல் பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற அனுமதிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியவற்றின் முன்பாக நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்தில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

காலை 8-30 மணிக்கு ஆரம்பமான இந்த மறியல் போராட்டம் முதலில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு முன்பாகவும் பின்னர் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முன்பாகவும் நடைபெற்றது.

மறியல்போராட்டத்தின் இறுதியில் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அதே சமயம் யாழ். தொழில்நுட்பக்கல்லூரியின் பகல் பகுதி நேர மாணவர் அமைப்பும் இன்று தொடக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. (இ-111-10)

## சனி அரைநாளும் ஞாயிறு முழுநாளும் கடைகளை மூடுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

குடாநாட்டிலுள்ள வர்த்தக நிறுவனங்களை சனிக்கிழமை அரைநாளும் ஞாயிற்றுக்கிழமை முழுநாளுமாக வாரத்தில் ஒன்றரை நாள்களும் மற்றும் பொது விடுமுறைகள், போயா விடுமுறைகள் ஆகியவற்றிலும் மூடவேண்டும் என்று நேற்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட சிவில் நிர்வாக இணைப்பதிகாரி பிரிகேடியர் ரி.ஜி. திலகரத்ன தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் வர்த்தக சங்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தவறுதலாக வெடித்த சிப்பாயின் துப்பாக்கி

### சங்கானையில் பரபரப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

சங்கானை கலாசார மண்டபத்தில் நேற்றுப் படையினர் ஒழுங்கு செய்திருந்த வலி. மேற்குப் பிரதேச வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகச் சம்பவத்தினால் அப்பகுதியில் சிறிது நேரம் பெரும் பதற்றம் நிலவியது.

கலந்துரையாடல் முடிவுற்றதும் அப்பகுதிக் கட்டளை அதிகாரியான மேஜர் பெற்றோ மற்றும் வலி. மேற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் இரு படையினர் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்ரல் 9

பளையில் யுத்தம் நடைபெற்று வரும் பகுதியில் புலிகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலினால் இரு படையினர் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-6 )

## தலையாட்டி முன் நிறுத்தப்பட்டு மீனவர்கள் கடும் சோதனை!

குருநகர்,ஏப்ரல்9

குடாக்கடலுக்கு நேற்றையதினம் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்கள் தமது தொழிலை முடித்து நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் குருநகர் இறங்குதுறைக்கு வந்தபோது தலையாட்டி முன்பாக நிறுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பதின் மூன்று பேர் தடுத்து வைக்கப்பட்டார்கள் எனவும் -

பின்னர் பிற்பகல் 4 மணியளவில் இவர்கள் பாதுகாவலர்களின் கையொப்பத்துடன் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-51)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 25 - 07 - 1934



உதிர்வு 10 - 03 - 2000

அமரர்

## சிவக்கொழுந்து சீனிவாசகம்

எம் நிறைவை எம் பொலிவை
காணவேண்டிய வேளை
எம்மைத் தவிக்கவிட்டு சென்ற அப்பாவே!
உங்களை இதயத்தில் இருத்தி
இருளில் தத்தளிக்கின்றோம்
உங்கள் பசுமை நினைவுகள் எங்கள்
உள்ளங்களில் என்றும் நிழலாடும்!

இன்று(09-04-2000)ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(C/11764)

# இரண்டாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

தோற்றம் 30 - 11 - 1928



மறைவு 01 - 04 - 1998

அமரர்

## கந்தையா இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி)

திதி: 09-04-2000

ஆண்டு இரண்டு ஓடித்தான் போனாலும் மாண்டுதான் போகுமா உங்கள் நினைவுகள்? ஆண்டாண்டு அழுதாலும் இவ்வுலகில் மாண்டார் தான் வருவாரோ?

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

16, கந்தையா வீதி,
சாவகச்சேரி.

(C/11713)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 - 05 - 1979



இறப்பு 12 - 04 - 1997

அமரர்

## சின்னராசா குமரேஸ்வரன்

(ராசன்)

திதி: 09-4-2000

எங்கள் அன்புச் செல்வமே, ராசன்
எம்மைவிட்டுப் பிரிந்து
மூன்று ஆண்டு சென்றாலும்
துயர் தாங்காது துடிக்கின்றோம்.
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை
விட்டு அகலாது ராசனே!

கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

சின்னராசா
குடும்பத்தினர்

(C/11759)

## தவறவிட்ட பணம்

தென்மராட்சி,ஏப்ரல்9

சாவகச்சேரி டச்சுவீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஒருதொகைப் பணம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (ஐ-117)


மிலேனியம்
புதுவருடத்தை முன்னிட்டு

## மலிவு விற்பனை

நியூ விமாகி

அன்பளிப்பு, வீட்டுப் பாவனைப் பொருள்கள், கப் & சோசர், டினர் செற், டீ செற், பிளேற்ஸ் வகைகள், கறி டிஸ், டீ மக், கிளாஸ் வகைகள், டீ பொட், றைஸ் பிளேட்ஸ்

என்பன பெற்றுக்கொள்ளலாம்.

நியூ விமாகி

இல.27/3 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (75242)

## விற்பனையாகின்றது

கொழும்பு
பிரபல ஆசிரியர்
P.அம்பிகைபாகனின்
ஆண்டு 5
புலமைப்பரிசில்
புத்தகம்
விற்பனையாகின்றது.

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.4, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். (75239)

## A/L 2000

இரசாயனவியல்
பயிற்சி நூல்கள்
மீட்டல் நூல்கள்
கிடைக்கப்பெறும்.
ஆக்கம்:
A.மகாதேவன் B.Sc.

பூபாலசிங்கம் புத்தகசாலை.

(75237)

## லிபேட்டி

அச்சுவேலி

சரத்குமார், விஜயகாந்த் நடிப்பில்

கப்டன் பிரபாகரன்

காட்சிகள்:- 10.30, 2.30
T.P - 070 - 212223
- 070 - 212678
Fax No.0094 - 70212223

(C/11704)

## ராஜா

யாழ்ப்பாணம்

5ஆவது வெற்றி வாரமாக...
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த

படையப்பா

காட்சிகள்
10.30,2.00,5.00

(C/11604)

## நாகம்ஸ்

சுன்னாகம்

சிவா,மோகினி,நாசர்
நடிப்பில்

சரமான
ரோஜாவே

(ரீலஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

(75070)


# பிராயச்சித்த விஞ்ஞாபனம்

மணற்கும்பான் அருள்மிகு
ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில்

காலாதீத பிராயச்சித்த விஞ்ஞாபனம் இன்று 09.04.2000 காலை 10 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து சாந்திகள் நடைபெறும். அடியார்கள் அன்னையின் விழாவில் கலந்து அன்னையின் அருளைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

(75248)

- அடியார்கள்.


உ

# திறப்பு விழா

## தனியார் வைத்தியசாலை

*The Private Nursing Home*

யாழ் வீதி, நெல்லியடி.

காலம்: இன்று (09-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலை8.17 மணி முதல் 10.07 வரையுள்ள சுபநேரத்தில்

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
(சமூக மருத்துவ பேராசிரியர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்)
அவர்களால் திறந்து வைக்கப்படும்.

M.B.B.S, F.R.C.S வைத்திய நிபுணர்களால்
சத்திரசிகிச்சையும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

தாங்களும் குடும்பத்தினரும்
கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

(C/11765)

டாக்டர்.க.இராதாகிருஷ்ணன்.

SALE! SALE!! SALE!!!

அதிசயம் ஆனால் உண்மை!
ஒரு லெந்த் சூட்டிங் விலை. 150/- மட்டுமே!
மேலும் புடைவைத் தினுசுகள் அனைத்துக்கும்
விசேட சலுகை உண்டு. கையிருப்பு குறைந்தளவே!

## CITY TEX & TAILORS

75, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(C/11706)


# நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

தோற்றம் 18-06-1918

மறைவு 09-04-1990

அமரர்

## உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா

(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை)

மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள். எபே 6:8

மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்.

வண. ஜெயக்குமாரன் அன்னப்பா

(C/11699)

# நீங்காத நினைவில் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 01 - 1910



உதிர்வு 09 - 04 - 1998

எம் அன்புத் தாயார்

## அமரர் திருமதி சிதம்பரம் நாகமுத்து

இருவருட மழிந்தாலும் ஒரு நிமிடம்
உமை மறவோம்!
பெரு நினைவில் பெருந் துயரில் பெருமகளே
அமிழ்ந்திடுவோம்!
பெரு நிழலாய் எமைத் தொடர்ந்து
பெருவாழ்வு காட்டிடம்மா!
பேதலிக்கும் பூமியதிற் பெருந்துணையாய்
வாருமம்மா!

மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
செல்வி நா. செல்லம்மா,
"சிதம்பரம்"
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(C/11758)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் நாகப்பர் கணபதிப்பிள்ளை

தோற்றம் 18-06-1921 மறைவு 10-03-2000

எமது பாசமிகு தந்தையாரின் அந்தியேட்டிக் கிரிகைகள் இன்று 09—04—2000 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

க. தவயோகநாதன்
[மகன்]

தும்பளை,
பருத்தித்துறை.

[சி/11739]

## யாழ் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்

## இலவச சீருடை வழங்கல்

ஐந்தாம் வகுப்பு வரையுள்ள மாணவருக்கு பெற்றோரும் அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள் அல்லது மாணவரின் பெற்றோரும் சீருடைகளை தவறாது வந்து பெற்றுக்கொள்ளவும்.

காலம்: 10-4-2000 திங்கள் ந. ப. 12—3 மணி வரை
11-4-2000 செவ்வாய் காலை 9—3 மணி வரை

குறிப்பு: இரு தினங்களும் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சமுகம் கொடுக்கவும்.

த. கந்தையா
அதிபர்.

(75222)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 8 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சாவகச்சேரி**

(139279ஏ), (139279பி),
(139279சி), (139320ஏ),
(139320பி), (139320சி),
(139406ஏ), (139407ஏ),
(139411ஏ), (139420ஏ),
(139420பி), (139421ஏ).
(139427ஏ), (139427பி)
(139427சி), (139428ஏ),
(139428பி), (139428சி),
(141434ஏ), (141434பி),
(141434சி), (141436ஏ),
(141436பி), (141438ஏ),
(141438பி).
(141441ஏ), (141441பி),
(141442ஏ), (141442பி),
(141442சி), (141448ஏ),
(141448பி), (141462ஏ),
(141462பி), (141462சி),
(141489ஏ), (141490ஏ).
(141490பி), (141491ஏ),
(141494ஏ), (141494பி),
(141496ஏ), (141496பி),
(141496சி), (141496டி),
(141496ஈ), (141496எவ்),
(141503ஏ), (141503பி),
(141522ஏ), (141522பி),
(141522சி), (141522டி).
(141538ஏ), (141557ஏ),
(141557பி), (141570)ஏ),
(141570பி), (141586ஏ),
(131501ஏ), (131501பி),
(135475ஏ), (139211ஏ),
(139217ஏ), (139217பி),
(139954ஏ), (139954பி).

**கரவெட்டி**

(122186ஏ), (122186பி),
(122186சி), (122186டி).
(129698ஏ), 129698பி),
(129698சி), (129698டி),
(135207ஏ), (135357ஏ),
(136922ஏ), (137837ஏ).
(137972ஏ), (137982ஏ),
(138003ஏ), (138003பி),
(138013ஏ), (138020ஏ),
(138033ஏ), (138033பி),
(138042ஏ), (138077ஏ),
(138876ஏ), (139991ஏ),
(140002ஏ), (140012ஏ),
[140021ஏ], [140056 ஏ],
[140073 ஏ], [140099 ஏ],
[140289 ஏ], [140321 ஏ],

**பருத்தித்துறை**

[131026 ஏ], [131026 பி],
[135331 ஏ], [135331 பி],
[135331 சி], [135331 டி],
[135378 ஏ], [137811 ஏ],
137859 ஏ], [137943 ஏ],
[137961 ஏ[, [137986 ஏ[,
[137987 ஏ], [138008 ஏ],
[138052 ஏ], (139938 ஏ],
[139988 பி], [139988 சி],
[140014 ஏ], [140092 ஏ],
[140215 ஏ], [140244 ஏ],
[14030 ஏ], [140352 ஏ],

[க]

## பெற்றோல் தட்டுப்பாடு

அரியாலை, ஏப்ரல் 9

கடந்த சில நாள்களாக யாழ். நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடும் பற்றாக்குறையும் நிலவி வருகின்றது.

வெளிச் சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் 90 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது.

(ஐ-17)

### காணாமற் போனோருக்கான

## மரணச் சான்றிதழ்களைப் பெறாதீர் எனக் கோரிக்கை

### பாதுகாவலர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

கடந்த 96 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனவர்களுக்கு வழங்கப்படவுள்ள மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டாம் என்று காணாமற் போனோரின் உறவினர்களிடம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் மேஜர் ஜெனரல் பலகல்ல முன்பு நடத்திய பேச்சுவார்த்தையின் போது பிராமணர் ஒருவர் உட்பட 84 பேர் தொடர்பான விவரங்கள் தம் வசம் உள்ளதாகத் தெரிவித்திருந்தார். அவர்களின் பெயர்களை உடனடியாக எமக்குத்தர வேண்டும் அவற்றைத் தரும் வரை மரணச் சான்றிதழ்களைப் பெறவேண்டாம் என சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். இவர்களுக்கு மரணச்சான்றிதழ்கள் வழங்கும் பட்சத்தில் காணாமற் போனதாகக் கூறப்பட்ட ஒவ்வொருவரும் கொல்லப்பட்ட திகதி, அவர்களைக் கொன்ற படையினரின் பெயர் விவரங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ள அவசர பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

## கொழும்பில் நான்கு தினங்கள் கம்பன் விழாவுக்கு ஏற்பாடு

கொழும்பு, ஏப்ரல் 9

கொழும்பு கம்பன் கழகம் ஆண்டுதோறும் நடத்திவரும் கம்பன் விழாவில் இவ்வாண்டுக்கான விழா எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் நான்கு நாள்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெறும் இந்த விழாவில் நம் நாட்டு அறிஞர்களும் தமிழக அறிஞர்களும் பங்குபற்றவிருக்கின்றனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை ஐந்துமணிக்கு ஆரம்ப வைபவத்துடன் ஆரம்பமாகும் விழாவில் காலை, மாலை என இரு அமர்வுகளில் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

ஊர்வலம், பட்டிமண்டபம், கவியரங்கம், கருத்தரங்கம், வழக்காடுமன்றம், இளைஞர் அரங்கம், கலை தெரியரங்கம், அறிஞர் கௌரவிப்பு என்று பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

(ஐ-3)

### நூற்றுக்கணக்கான

## சீவல் தொழிலாளர்கள் வருமானம் இழந்தனர்

தென்மராட்சி, ஏப்ரல் 9

பச்சிலைப்பள்ளி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள நூற்றுக்கணக்கான சீவல் தொழிலாளர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அலுவலகம் பளையில் உள்ளதால் தமக்குக் கிடைக்க வேண்டிய சம்பளத்தையும் பெறமுடியாத நிலையில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கச்சார்வெளி, செல்வபுரம், புலோப்பளை, அல்லிப்பளை, முகமாலை, இத்தாவில், இந்திராபுரம், அம்பளாவளை, சுடலைப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சீவல் தொழிலாளர்களே பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் [09 – 04 – 2000] ஞாயிற்றுக்கிழமை பகல் 10 55 மணி முதல் 11. 10 மணி வரையுள்ள சித்தயோகம் கூடிய சுபவேளையில்,

எமது புத்திரி திருவளர் செல்வி

**தர்சிகா அவர்களுக்கு**

இறையருள் துணைகொண்டு பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

அ. சிறீசிவகுமார்
(C,T,B)
ஜெகதீஸ்வரி தம்பதிகள்
குஞ்சு சித்தப்பா.

பொற்பதி வீதி,
1ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(75221)

## 16 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியை
திருமதி சிவமதி ஏகாம்பரநாதனின்
பாசமிகு மாமியார்

### திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு

அவர்களின் மறைவு குறித்து அவரைப் பிரிந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/அராலி சரஸ்வதி ம. வி.

(75213)

## புலமைப் பரிசில் வகுப்புக்கள் - தரம் 5/4

ஆரம்பம்: - 10-4-2000 திங்கள் பி. ப 5-00 மணி

தினசரி பிற்பகல் வகுப்புக்களுடன், சனி/ஞாயிறு மேலதிக வகுப்புக்களும், வாராந்த பரீட்சைகளும் நடைபெறும். அடிப்படை ஆங்கில அறிவுக்கும், ஏனைய சகல புலமைப் பரிசில் அம்சங்களுக்கும், தீவிர கவனம் செலுத்தப்படும். பெற்றோர் நேரில் தொடர்பு கொள்ளுவது விரும்பத்தக்கது.

## விசேட ஆங்கில / சிங்கள வகுப்புக்கள்

சகல தரங்களுக்கும் ஏற்ற பகல்நேர, மாலைநேர வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன.

சகல விவரங்களுக்கும் நேரிலோ,
தொலைபேசி மூலமோ (3520) தொடர்பு கொள்ளவும்.

**TUITION AND SECRETARIAL SERVICE**

46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(75157)


## நீங்கா நினைவலைகள்

16 ஆம் ஆண்டு | 14 ஆம் ஆண்டு



**அமரர் நா.கிருஷ்ணபிள்ளை**
(முன்னாள் C.C., வீடமைப்புத் திணைக்களம்)
தோற்றம்: 19-12-1927
மறைவு: 06-04-1984



**செல்வன் கி.சந்திரமோகன்**
தோற்றம்: 05-12-1955
மறைவு: 06-04-1986

திதி: 09-04-2000

தாங்க முடியாத சுமைகளைத் தந்துவிட்டு எங்கு சென்றீர்கள்?

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

'கிருஷ்ண பவனம்'
கட்டைவேலி.

(75081)

## நினைவஞ்சலிகள்

**ஐந்தாம் ஆண்டு நினைவு**



**அமரர் வைரமுத்து நடராசா**

மண் உலகம் 1927 - 03 - 27
விண் உலகம் 1995 - 04 - 02

**இரண்டாம் ஆண்டு நினைவு**



**அமரர் நடராசா உமாகரன்**

மண் உலகம் 1970 - 12 - 30
விண் உலகம் 1998 - 12 - 19

அன்பின் உறைவிடமாய் அரவணைப்பின் அமைவிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து எமையெல்லாம்
ஆறாத்துயரில் மூழ்க வைத்து விண்ணுலகம் சென்றீர்களோ?

ஆறவில்லை எம் நெஞ்சம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

77/1, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
புண்ணியர்மடம்,
யாழ்ப்பாணம்.

(75149)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 1931
மறைவு: 10 - 03 - 2000

**திருமதி லீலாவதி இராசரத்தினம்**
(லீலா அக்கா - அளவெட்டி)

ஜேர்மனியில் 2000. 03. 10ஆம் திகதி இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்திற்கு மல்லாகத்தில் நிகழ்ந்த துக்க அனுஷ்டிப்பு வைபவத்தில் நேரில் கலந்து கொண்டும் அனுதாபங்களைத் தெரிவித்தும் வேறு பல வழிகளில் உதவி புரிந்தும் எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

- குடும்பத்தினர்.

தகவல்:-
திரு. ந. கதிர்காமலிங்கம்,
திருமதி மாலினி கதிர்காமலிங்கம்,
நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம்.

(74976)

## 59ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி பரமேஸ்வரி சிவநாதன்**

மண்ணில்: 09-10-1948
விண்ணில்: 12-02-2000

12-02-2000 அன்று இறைபதமடைந்த திருமதி பரமேஸ்வரி சிவநாதன் அவர்களின் 59 ஆம் நாள் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (10-04-2000) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் (இ.நே) எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அவ்வமயம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் அகாலமரணம் கண்டு ஆறுதல் அளித்து உற்றவர்களைப்போல் பலவகைகளிலும் உதவிகள் புரிந்த அயலவர்கள், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டு வருகைதந்த விஞ்ஞானக் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கடித மூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
செ. சிவநாதன்
(இலிகிதர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)
பிள்ளைகள்.

ஐயா கடையடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(75113)

# உதயன்

## கேள்விக்கு என்ன பதில்?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கானபேச்சுவார்த்தை முயற்சிகள் சோர்ந்து போய் விட்டனவோ என்று எண்ணு மளவுக்கு ஆரவாரம் குறைந்திருக்கிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இது குறித்து ஆராய்ந்த போதும் தமிழ்க் கட்சிகளுடன் பேசிய போதும்தெரிந்தவேகத்தையும் உத்வேகத்தையும் இப்போது காணமுடியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் அரசாங்கமும் இதுவரை ஐந்து தடவைகள் சந்தித்துப் பேசிவிட்டன. ஆனால் அதிகாரப் பகிர்வு தொடர்பான பிரதான விடயங்கள் இன்னும் முற்றாக ஆராயப்படவில்லை.

பிந்திய இரு சந்திப்புகளின் போதும் உத்தேச பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படக் கூடிய அதிகாரங்கள் குறித்து ஆராயப்பட்டது. இருதரப்புகளுக்கும் இடையில் இது தொடர்பாக கருத்து முரண்பாடுகள் தோன்றியதாக அறிய வந்தது. இந்தத் தகவல் வெளியே வந்தது குறித்து, அரச தரப்பில் கவலை கூடத் தெரிவிக்கப்பட்டது.

எப்படியே அதிகாரப்பரவல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் கருத்திணக்கம் காணப்படவில்லை. அதிகாரப் பரவல்தன்மையை முடிவு செய்தபின்னரே பிராந்தியசபை குறித்து ஆராய்வது உகந்தது என்று அரச தரப்பு வட்டாரங்கள் விளக்கம் வேறு அளித்துள்ளன.

இந்த வேகத்தில் விடயங்கள் ஆராயப்பட்டால், ஐ.தே க. அரசு பேச்சுக்கள் பூர்த்தியாக இன்னும் பல வாரங்கள் செல்லும் என்று ஊகிக்கப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் இந்தியா செல்லவுள்ளார் என்பது வேறு.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் மேமாதம் 29 ஆம் திகதி பாரிஸில் நடைபெறுவதற்குமுன்னர்இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகக் காட்ட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு முந்திய வருடங்களைப் போல. வழுவி நழுவிக் காரியத்தைச் சாதிக்க இயலாத நெருக்கடியான, இக்கட்டான நிலை இம்முறை!

அதனாலேயே, நீண்ட கால இனப்பிரச்சினைக்கு அட்டவணை வகுத்து மூன்று மாதங்களில் முன்னேற்றம் காட்ட முனைந்தார் ஜனாதிபதி சந்திரிகா. இந்தச் சிக்கலான விடயத்தில் குறுகிய காலத்தில் கருத்திணக்கம் காண்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது அப்போதே தெரிந்த விடயம். அது இப்போது நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது. அரசு வகுத்த காலஅட்டவணை கரைந்து கொண்டிருக்கிறது!

பாரிஸ் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் ஆகக்குறைந்தது, அரசு — ஐ. தே. க. இணக்க நிலை உருவாகியுள்ளதாகவேனும் காட்டும் முயற்சியில் வெற்றியீட்ட அரசு இப்போது முனைகிறது.

ஆனால் —

அரச தரப்புக்கும் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கருத்திணக்கம் ஏற்படினுங் கூட, தென்னிலங்கையின் ஏனைய அரசியல் சக்திகளான ஜே. வி. பி. நவசமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்றவற்றுடன் பேசாமல் தெற்கின் கருத்திணக்கம் உருவாகிவிட்டது என்று கூற முடியுமா என்ற புதிய கேள்வி ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்வதால் சமாதான முயற்சிகளுக்கு எதிரான சிறிய சக்திகளின் 'கொட்டத்தை' அடக்கி விடலாம் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அரசின் பதில் என்னவோ?

# சர்வதேச தீவிரவாதத்துக்கு உதவி வழங்குவதை நிறுத்துக!

## தலிபானுக்கு ஐ. நா. எச்சரிக்கை

நியூயோர்க், ஏப்ரல் 9

சர்வதேச தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்தா விட்டால் ஆப்கானிஸ்தான் மீது புதிய தடைகள் விதிக்கப்படும் என தலிபான் இயக்கத்தை ஐ. நா பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது,

நீண்ட விவாதத்தின் பின் பாதுகாப்பு சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அறிக்கையிலேயே மேற்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

ஆபிரிக்காவில் இரு அமெரிக்கத் தூதரகங்களில் நடந்த குண்டு வெடிப்புகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஓசாமா பின்லேடனை தகுந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறும்—

தலிபான் படையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை மற்றைய நாடுகளுக்கு எதிராக தீவிரவாத இயக்கங்கள் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாதென்றும் — அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ–ரி)

# பாக். தீவிரவாதி சுட்டுக் கொலை

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஜப்தியால் நகரில் பாகிஸ்தான் உளவாளி ஒருவர் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

'லஸ்காரேதொய்பா' என்ற தீவிரவாத அமைப்பின் பிரதிநிதியாக செயற்பட்டு வந்த ஆசாம் கோரி என்பரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் இளைஞர்களை

**உலக அரங்கில்**

தீவிரவாதிகளாக்கி பயிற்சி அளித்து தவறான வழிகளில் வழிநடத்தியதாகவும். இவர் கொல்லப்பட்டது தீவிரவாத சக்திகளுக்கு வீழ்ந்த பலத்த அடி என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ–ரி)

# சிலுவையின் சுவட்டினில் சீரிய வாழ்வடைவோம்!

இன்றைய மனிதகுலம் பல்வேறுபட்ட உளநெருக்கடிகள், தாக்கங்கள், சச்சரவுகள், வறுமை, பிரிவு, அடக்குமுறை, அச்ச உணர்வுகள் போன்ற பல சுமைகளைச் சுமந்தபடி உழன்று கொண்டிருக்கிறது. எமக்கு ஏன் இந்தத் துன்பங்கள், சிலுவைகள் என்று எண்ணி மனம் சோர்ந்து விரக்தியின் விளிம்பில் துவண்டு துடிக்கின்றது. இந்த வேதனைகளும் சோதனைகளும் புடமிட்ட பொன் நிகர்ப் புதுமனிதராக எம்மை மாற்றும் என்பதை மறந்து விடுகிறோம்.

பாவமறியாப் பரமன் யேசு சிலுவை மரத்தில் தொங்கி எமக்கு முடிவில்லா வாழ்வைப் பெற்றுத் தந்தார். இந்தச் சிலுவையானது பல தத்துவங்களை எம்முன் எடுத்தியம்புகிறது. கைகளை விரித்து கழுவினில் மரித்த திருஉருவம் தியாகத்தையும், பேரன்பையும் பறைசாற்றுகிறது. நெடுக்காகவும் குறுக்காகவும் அமைந்த சிலுவைச் சட்டங்கள் இறைவனுக்கும் எமக்கும், எமக்கும்அயலானுக்கும் உள்ள தொடர்பை, ஒன்றிப்பைப், பகிர்வை உணர்த்துகின்றது. இறையன்பை பிறருடன் பங்கிட்டு வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

யேசுவின் இம்மீட்புப்பாதையின் நிகழ்விலே பல தரப்பட்ட குணஇயல்புகளையும் உணர்வலைகளையும் கொண்ட மனித பாத்திரங்களைச் சந்திக்கின்றோம் பணத்திற்காக தன் குருவையே காட்டிக் கொடுத்த யூதாஸ் ஒரு வகை. அதே சமயம் என் பாவங்களை மன்னித்து மகிமை அருளும் என்ற வலதுபுறக் கள்வன் இன்னொருவகை. பதவியைக் காக்க கொலைத் தீர்ப்பிட்ட பிலாத்து ஒரு ரகம். சிலுவை சுமக்ககரம்கொடுத்த சீமோன் தனிரகம். அச்சத்தினால் மும்முறை மறுதலித்த இராயப்பரும் யேசுவின் இதயத்தை ஈட்டியால் குத்திக் கண்பார்வையடைந்து விசுவசித்த போர் வீரனும் பயணித்தது சிலுவையின் பாதைதான். யேசுவின் உடலை உடைத்தனர் யூதர்கள். உதிர்ந்தகுருதியைத் துடைத்தாள் வீரமங்கை. எள்ளிநகையாடிச் சிலுவையிலேற்றிக் கொன்று வஞ்சம் தீர்த்தது கொலைஞர் கூட்டம். 'பிதாவே இவர்கள் அறியாமற் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்' என்று தந்தையிடம் பரிந்துரைத்துப் பகைவருக்கு அன்பு காட்டினார். அன்பின் அரசர். உங்கள் பகைவருக்கு அன்பு செய்யுங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள் (மத். 5: 44). இதையே தன் இறுதி நேரத்திலும் செயலிற் காட்டினார்.

இன்று எம்மிடையே ஏக்கங்கள், சோகங்கள், சுமைகள். உளநெருக்கீடுகள், அவலங்கள் அதிகரித்து அமைதியற்று அலைந்துகொண்டிருப்போரே அதிகமாகக் காணப்படுகின்றனர். இந்நிலைமைக்கு யார் காரணம்? வெளித்தரப்பினரையே குற்றம் சாட்டுகின்றோம். உன் தரப்பை, உன் உள்ளத்தைத் தொட்டுப்பார். இவற்றை அகற்ற நீயும் ஏன் ஒரு கருவியாக மாறக்கூடாது? உள்ளங்களில் புரிந்துணர்வும், மன்னிப்பும், சகிப்புத்தன்மையும் அற்ற நிலையே இதற்குக் காரணம்.

### தவக்காலச் சிந்தனை

(33 ஆம் நாள்)

உன் அயலவனின் வாழ்க்கைப் பயணத்தில் சிலுவைகள், தாக்கங்கள், சிக்கல்கள், உறவுமுறிவுகள் ஏற்பட்ட வேளை நீ எவ்வாறு செயற்பட்டாய்? பணத்தாசை கொண்ட யூதாசாகவா? மனம் வருந்தித் திருந்திய கள்வனாகவா? பதவியை நேசித்து நீதியை வஞ்சித்த பிலாத்துவாகவா? சிலுவைச் சுமையைப் பகிர்ந்து கொண்ட சீமோனாகவா? மறுதலித்த இராயப்பராகவா? துயர் துடைத்த வீரப்பெண்ணாகவா? உனது இடத்தை நீயே சிந்தித்து மாற்றிக் கொள். இதயத்தை உடைத்து உன் பகைவரோடு ஒப்புரவாகிக்கொள். உங்களுள் ஒவ்வொருவனும் தன் சகோதரனை முழு உள்ளத்தோடு மன்னிக்காவிட்டால் என் வானகத் தந்தையும் அவ்வாறே செய்வார் (மத். 18: 35).

கோதுமைமணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய மிகுந்த பலன் தரமுடியாது. எனவே பிறர் எம்மை மன்னிக்க வேண்டும், மதிக்க வேண்டும், அன்பு காட்ட வேண்டும் என எதிர்பார்ப்பதை விடுத்துத் தியாக உணர்வுடன் பணிவாழ்வைச் செயலிற் காட்டுவோம். திறந்த மனதுடன் மன்னித்து வாழ்வோம். மனிதத்தை மலர வைப்போம். சிலுவையின் சுவட்டினிலே சீரிய வாழ்வடைவோம்.

- எஸ். யேசுதாசன்
(கொழும்புத்துறை)

### நாளை

பங்குனி 28
திங்கட்கிழமை
திதி: ஷஷ்டி
பிற்பகல்: 12.59 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முற்பகல் 9 .12 வரை.
ஷஷ்டி விரதம்
நல்லைக்குருமணிகுருபூசை
சுபநேரம்: 12 06 — 1.36
ராகுகாலம்: 7.36— 9.06
(பகலும் இரவும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

காலத்தின் நிலையை அறிந்து கொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்து கொள்வது போலாகும்.

-ஜேம்ஸ் லேன்.

# ஷெரீப் உட்பட அறுவர் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், ஏப்ரல் 9

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ்ஷெரீப் அவரது சகோதரர் உட்பட ஆறு பேர் மீது லஞ்சக்குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கியது, வெளிநாட்டு வங்கிகளில் பணம் வைத்திருந்தது, சொந்த விவரங்களை தெரிவிக்காதது, வரி ஏய்ப்பு உட்பட 21 குற்றச்சாட்டுகளின் பேரில் இவர்கள் தேசிய பொறுப்பு நிர்ணய சபை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர். பின்னர் நீதிமன்றக் காவலுக்காக ராவல்பிண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதற்கிடையில் ஷெரீப் மீதான ஆயுள் தண்டனையை எதிர்த்து அவரது சட்டத்தரணிகள் சிந்து நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்யத் தீர்மானித்துள்ளனர். (ஐ-ரி)

# வெளி நாட்டவரைக் கடத்தினால் ஆயுள் தண்டனை

கனடாவிற்குள் சட்டவிரோதமாக ஆட்களை அழைத்து வருபவர்களுக்கு ஆயுள் தண்டனையும், ஒரு லட்சம் கனேடிய டொலர் அபராதமும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் என்று கூறிக் கொண்டு பொருளாதார லாபம் கருதி நாட்டிற்குள் வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கனேடிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ–ரி)

# எதிரொலி..

- இடியன் -

● யாழ்ப்பாணத்திலிருந்து படைகள் வாபஸ் பெறப்படமாட்டா என ஜனாதிபதி அறிவித்துள்ளார்!

★ ''தந்திரோபாயமாகப்'' பின்வாங்கக் கூடும் என்ற அர்த்தமே இதற்கு?

● இனப்பிரச்சினையில் நோர்வேயின் தலையீட்டை எதிர்த்துக் கொழும்பில் பிக்குகளின் ஆர்ப்பாட்டம்!

★ போர் Way (வழி) இருக்கிறது; நோர்வே வேண்டாம் என்கிறார்களோ?

● கிளாலி தேவாலயத்தில் தஞ்சமடைந்த மக்கள் அரசின் நிவாரணத்தை ஏற்க மறுப்பு!

★ கொழும்பிலே சொகுசு வாழ்க்கை நடத்தும் சில தமிழ்த் தலைவர்கள் இதைக் கேட்டு என்ன செய்வார்களோ?

● சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிராகக் கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பி. பி. ஸி. யின் 'சந்தேசிய' செய்தியாளர் தாக்கப்பட்டுள்ளார்!

★ அதாவது செய்தியாளர் ஒருவர் மகாசங்கடத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்!

● பொத்துப் பொத்தென்று இலங்கை விமானங்கள் விழுகின்றன!

★ அவை விழுகின்ற காரணங்களைப் பொத்து பொத்தென்று 'பொத்தி' வைக்கும் முயற்சிகளும் வேகமாக நடைபெறுகின்றன!

● சமாதானத்துக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களிற் காவி உடை தரித்தோர் அதிக அளவில் கலந்து கொள்கின்றனராம்!

★ இனத்துவேஷத்தை நெஞ்சிற் காவி இலங்கையின் எதிர்காலத்தை உடை என்பதே ''காவி உடை'' என்பதன் கருத்து என்கின்றார் அரசியலில் ஈடுபாடுடைய தமிழ்ப் பண்டிதர் ஒருவர்!

● வடபகுதியில் இப்போது நடைபெற்று வரும் போர் சம்பந்தமான விஷயங்களில் உதவிப் பாதுகாப்பு அமைச்சரும், றோகான் தளுவத்தையும் ஓரங்கட்டப்பட்டுள்ளனராம்!

★ இதுவும் ஒரு விதமான ''கட்டாய ஓய்வு''தானோ?

உ
சிவமயம்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# அருள்மிகு
# ஸ்ரீ சிவஞான வைரவர் ஆலய கும்பாபி

## 09-04-2000

## ஆணவத்தை அழிக்கும் பெருமான்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ சிவஞான வைரவப் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடை. பெறுவதையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். வரலாற்றுப் பெருமை மிக்க இந்துக் கல்லூரியில் நடுநாயகமாக நீண்ட காலம் எழுந்தருளி இருப் பவர் வைரவப் பெருமான். பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும் ஏனைய துறையின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்து வரும் இக் கல்லூரியின் பக்தி நெறியோடு வாழ்வதற்கு இவ்வாலயம் கல்லூரியில் அமைந்திருப்பது ஒவ்வொரு மாணவனும் பூரணமான மனிதனாக வாழ வழி காட்டுகின்றது.

வைரவப் பெருமான் அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞானம் என்கின்ற ஒளியைத் தருபவர். ஆணவம் எங்கு தோன்றுகின்றதோ அங்கு வைரவப் பெருமான் தோன்றி ஆணவத்தை அழித்துப் பூரணமான வாழ்வைத் தருகின் றார். வைரவப் பெருமானை எல்லோரும் வழிபட்டு அருளுக்குப் பாத்திரமா வீர்களாக. இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் மூலம் பாடசாலையும் பாட சாலையைச் சார்ந்த அனைவரும் புனிதம் அடைய இக் கும்பாபிஷேகத்தைத் தரிசித்து புண்ணியப் பேற்றைப் பெற்று வாழ்வோமாக! இறைவன் எல்லோ ரையும் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
*(2ஆவது குரு மகா சந்நிதானம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்)*

## ஞான வைரவரே வழிகாட்டி

ஒரு மாளிகைக்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியமானதோ அதே போல் அறிவு மாளிகையான எமது கல்லூரியின் சாதனையின் பெருமைக்கும் தூய்மையான மகிமைக்கும் ஞானவைரவர் நல்ல வழிகாட்டியாகத் திகழ்வது கண்டு நினைந்து,வியந்து,திளைத்து,நிற்கின்றேன். ஞான வைரவரை வழிபட்டு வருபவர்கள் உடல்,உளவளம் பெறுவதுடன் ஆத்மீகப்பலமும் பெறுகின்றனர். நாள்தோறும் நல்லறிவு தலைப்படுகின்றனர். நாதனடி தொழுவதால் தன்னா திக்கம் கொண்டவர்கள் அகந்தை அடங்கி ஞாலம் சிறக்க வழிகாட்டப் படுகின்றனர். காவல் தெய்வத்தைப் பணிவதால் துணிவுபிறந்து,கடமையில் உறுதியாகின்றனர். வெல்ல வரும் வினைப்பகையை மடித்து வீழ்த்துகின்ற னர்.

மாமரத்தின் கீழும் கொன்றை மரத்தின் கீழும் குடி கொண்ட ஞானவைரவர் தன்அடியவரான மாணவர்களை வளமுடன் வாழ வைத்ததால் கல்லூரி வளாகத்தின் கவின் கோயிலில் அமர்ந்து காட்சியளிக்கின்றார். சைவப் பண் பாட்டுச் செழுமையை வளர்த்தெடுக்க அருள் சுரக்கிறார். நாள்தோறும் உள்ளத் தைக் கசிந்துருக வைக்கும் தேவாரப் பதிகங்களும் இசையால் வசமாக்கும் பக்திப் பாசுரங்களும் அறநெறிப் போதனைகளும் ஒலித்துக் கொண்டிருக்க திசைகாட்டியாகத் திகழ்கின்றார். தொடர்ந்துகொண்டிருக்கும் திருப்பணிகளால் திகைக்க வைத்து உள்ளத்தை இன்பத்தால் தழைக்கவைக்கிறார்.

ஞான வைரவரின் புதிய ஆலய வரலாற்றுக்குப் பழைய மாணவர்கள் ஆற்றி வரும் பங்கு ஏட்டிலோ எண்ணிலோ அடக்க முடியாதது.இன்றைய குடமுழுக்கு நாளில் தித்திக்கும் திருவருள் அளிக்கும் சேவடிகளால் போற்றி யாழ். இந்து அன்னையின் சமூகத்தவருக்கு இன்ப அன்பு நல்க ஆசி வேண்டுகின்றேன்.

**திரு. அ. சிறிக்குமரன்.**
*அதிபர்,யாழ்.இந்துக் கல்லூரி.*

## காக்கும் கடவுள் இவர்

ஆலயங்கள் ஆன்மீகம் வளரும் அறநிலையங்களாகும். தேவர்கள் வந்து உறையும் இடம் என்பதால் தேவஸ்தானம் என்ற சிறப்புப் பெயர் பெறுகின்றது. இறைவனின் அருள் ஒளி அங்கு எப்பொழுதும் பிரகா சித்துக்கொண்டிருக்கும். உலகம் முழுவதிலும் சூரியன் ஒளி பரவினாலும் சூரிய ஒளியிலிருந்து நெருப்பினை நாம் நேரடியாகப் பெற முடியாது. 'சூரியகாந்தக் கல்' என்னும் ஒரு வில்லையைப் பயன்படுத்தித்தான் நெருப் பினைப் பெற முடியும். அதேபோல் இறைவனின் திருவருள் எல்லா இடமும் பரவியிருந்தாலும் அத்திருவருளை ஓரிடத்தில் குவித்துத்தரும் புனித இடங்க ளாகத் திருக்கோயில்களே விளங்குகின்றன. அத்திருக்கோயில்களில் திருவ ருள் என்னும் பயிர் வளர அபிஷேகங்கள், ஆராதனைகள் அவசியமானவை.

முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களுக்கு 'கும்பாபிஷேகம்' என்னும் பெருஞ்சாந்திக் கிரியை மூலமே திருவருளை நிலை நிறுத்தும் பெரும் பணியைச் செய்யமுடியும்.

கும்பாபிஷேகப் பணியைச் செய்பவர்களும் செய்விப்பவர்களும் ஆன்மீக நெறியில் தங்களையும் வளர்த்து ஏனையவர்களையும் வளர்க்கும் பெரும் புனிதச் செயலுக்கு தங்களை அர்ப்பணித்த பெருமைக்குரியவர்களாவார்கள்.

யாழ்.இந்துவின் மத்தியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் காக்கும் கடவுளாகத் திகழ்கின்ற எம்பெருமானின் கும்பாபிஷேகத் திருப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள், அடியார் கள், அன்பர்கள், அனைவரும் எம்பெருமானின் பேரருள் பெற்றுப் பெரும் பயன் அடைந்து பல்லாண்டு இனிது வாழியவே!

**பிரம்மஸ்ரீ பிரதிஷ்டாரத்னா**
**சாமி ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள்**
*(கும்பாபிஷேக பிரதம குரு)*

## எஞ்ஞான்றும் ஞாலம் புகழ ஞானம் தருபவர்

காவல் தெய்வமாம் ஞான வைரவர் எமது கல்லூரி வளாகத்தில் விரும்பி உறைந்து அருள் நெறிகாட்டி நூற்றாண்டு கால வரலாற்றுப் பெருமைக்கு மகிமை சேர்க்கின்றார். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கேற்ப மாணவர்களுக்கு அன்பு, அறிவு, ஆசாரம், பக்தி என்பவற்றை வளர்க்க ஆதார மூர்த்தியாக ஞான வைரவர் விளங்குகிறார். இன்று பேரோடும் புகழோடும் வாழ்கின்ற பழைய மாணவர்கள் பலர் ஞானவைரவரின் பேரருள் பெற்று உய்ந்தவர்கள் என்பதை என் அனுபவத்தில் அறிவேன். புதுப்பொலிவுடன் விளங்கும் புனராவர்த்தனம் செய்யப்பட்ட ஆலயத்தில் நடைபெறும் குடமுழுக்கு நீராட்டு விழாவில் மந்திரம், கிரியை செபம், தியானம், ஹோமம், பாராயணம் ஆகிய கிரியைகளில் மேலும் புத்தூக்கம் பெற்று தித்திக்கும் திருவருள் எஞ்ஞான்றும் சுரக்கும் தெய்வீக சாந்நித்தியம் கைகூடும்.

**கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன்**
(செயலர், கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

### இன்று கும்பாபிஷேகம்

**யாழ்ப்பாணம் திரு வண்ணை நகர் யாழ். இந்துக் கல்லூரி அருள்மிகு சிவஞான வைர வர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று காலை 8.57 முதல் 9.57 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம் பெறுகின்றது.**

**பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை ஆளணியினர், முன்னாள் ஆசிரியர் கள், முன்னாள் அதிபர்கள், பழைய மாணவர் கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனை வரையும் மகாகும்பாபிஷேக நிகழ்வில் பங்கு பற்றி ஞானவைரவரின் அருள் பெறுமாறு அன் போடு அழைக்கிறோம்!**

**- கல்லூரி சமூகம் -**



சிவஞானவைரவர் ஆலயத் தோற்றம்

## அறிவாலயத்துள் தெய்வாலயம்

இலங்கையைச் சிவபூமி எனத் திருமூல நாயனார் அழைத்தார். சிவபூமியாகிய இலங்கை யில் ஞானபூமியாகத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடு. சைவத்தின் காவலராகவும் சைவ சேனாதிபதியாகவும் திகழ்ந்த நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக தன்னு டைய வாழ்வு முழுவதும் அரும்பணியாற்றினார். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவக்கல்வி வளர்ச்சி அடைவதற்கு இவரே வழிகாட்டியாக இருந்தார். வண்ணார்பண்ணையில் தாய் மொழிக் கல்விக் கூடமாகிய சைவப்பிரகாச வித்தியாசாலையை கி.பி. 1848 இல் இவர் ஸ்தாபித்து நடத்தி வந் தார். சைவப் பிள்ளைகள் சைவப்பண்பாட்டுச் சூழலில் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமான், ஆங்கிலப் பாடசாலை ஒன்றை நான்கு வருடங் கள் மட்டும் நடத்தி வந்தார். அக்காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த ஆங்கிலேய ஆட்சி யாளர்களின் அங்கீகாரம் கிடைக்காததாலும், போதியளவு மாணவர் தொகை இல்லாததாலும் ஆங்கிலக் கல்லூரியை அவரால் தொடர்ந்து நடத்த முடியவில்லை. நல்ல மனிதர்களுடைய தூய்மையான சிந்தனைகள் என்றோ ஒரு நாள் செயல் வடிவம் பெறும் என்பதே வரலாற்று உண்மையாகும்.

நாவலர் வழி வந்த பல சைவப் பெரியார் களின் கூட்டுமுயற்சியினால் 1890 ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் தோற்றம் பெற்ற இந்துக் களின் தலை நிமிர் கழகமே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகும். இந்துக் கல்லூரி தோற்றம் பெற்ற இடம் ஒரு புனித பூமியாகும். பாடசாலை கட்டப்பட்ட வளவின் வடகிழக்கே இருந்த கிணற் றின் அருகே ஒரு பெரிய மாமரமும் ஒரு சிறிய கொன்றை மரமும் நின்றன. அம்மாமரத்தின் அடி யில் ஒரு வைரவ சூலம் பல்லாண்டுகளாகப் பள்ளிக்கூடம் கட்டப்படுவதற்கு முன்பிருந்தே ஊர் மக்களால் வழிபடப்பட்டு வந்தது. அந்தச் சூலத் துக்கு அயலில் உள்ள மக்கள் செவ்வாய், வெள் ளிக்கிழமைகளில் வடைமாலை சாத்திப் பொங்கல் படைத்து சிறப்புப் பூசைகள் செய்து வந்தார்கள். ஞான வைரவப் பெருமானின் அருளாட்சியே யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்க ளின் சாதனைகளுக்கெல்லாம் திசைகாட்டியாகத் திகழ்கின்றது.

கல்லூரியின் நூற்றாண்டு விழா அண்மித்துக் கொண்டிருந்த காலத்தில் ஞானவைரவப் பெருமா னுக்கு மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலிய உறுப்புகளோடு ஆலயம் அமைக்கப்பட்டு 10-04-1989இல் மகா கும்பாபிஷே கம் பழைய மாணவர் சங்கத்தினால் சிறப்பாக நடத்தப்பட்டது. அறிவாலயத்துள் அமைக்கப்பட்ட திருக்கோயில் ஆகையால் அறிவுத்தெய்வமாகிய வித்தியா கணபதிக்கும் ஞானத் தெய்வமாகிய தண்டாயுதபாணிக்கும் வைரவப் பெருமானுடன் இணைத்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன. கும் பாபிஷேகத்தின் முன்னோடி நிகழ்வாக பழைய மாணவர் சங்கத்தினர் சிவஞானத் தமிழ் மாநாட்டி னைச் சிறப்பாக நடத்தினார்கள். மண்டலாபிஷே கப் பூர்த்தியோடு இணைந்து கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தினர் நான்கு நாள்கள் சிவமணம் கமழும் திருமுறை மாநாட்டை நடத்தினார்கள்.

பல ஞானிகளும் துறவிகளும் கல்விமான்க ளும் காலம் காலமாக இக்கல்லூரிக்கு வருகை தந்து கல்லூரிக்கும் கல்வி பயின்ற மாணவர் களுக்கும் ஆசிவழங்கினார்கள். சுவாமி விவேகா னந்தர், கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி, மகாத்மாகாந்தி, சுத்தானந்தபாரதியார், சிவக் கவிமணி சுப்பிரமணியமுதலியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார்,திருமுருககிருபானந்த வாரி யார் போன்ற பல அருளாளர்கள் இக்கல்லூரிக்கு வருகை தந்துள்ளார்கள். சிவப்பொலிவும் தவப் பொலிவும் மிக்க பல ஆசிரியர்கள் இங்கு பணி யாற்றியிருக்கிறார்கள். ஈழத்தில் மாத்திரமல்லாது உலகின் பல பாகங்களிலும் யாழ். இந்துவின் மைந்தர்கள் மேதைகளாக அறிவியல் விற்பன்னர் களாகப் பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் உலகின் எந்தப்பகுதியில் இருந்தாலும் தம்மை உருவாக்கிய கலைக்கோயிலாகிய யாழ். இந்துக் கல்லூரியை நெஞ்சத் தாமரையில் போற்றி வரு கின்றார்கள்.

சிவத்தமிழ் வித்தகர்
**சிவ. மகாலிங்கம்.**
உப அதிபர் பலாலி ஆசிரியர் கலாசாலை,
பழைய மாணவர்,
முன்னாள் ஆசிரியர்-யாழ் இந்துக் கல்லூரி

போர்க்காலச் சூழ்நிலையினால் நமது மக்க ளுடைய சீரான வாழ்வு சிதறடிக்கப்பட்டாலும் உயிரிழப்புக்களும், உடைமையிழப்புக்களும் ஏற் பட்டாலும் அழியாச் சொத்தாகிய கல்வியை நமது சமுதாயம் முற்றாக இழக்காமல் இருப்பதற்கு யாழ். இந்துக்கல்லூரி போன்ற உயர்கல்வி நிறு வனங்களின் பங்களிப்பே காரணமாகும். சமயப் பற்று நிறைந்த இந்துக் கல்லூரியின் பழையமாண வர் சங்கத்தினரும் பாடசாலையும் இணைந்து ஆலயத் திருத்த வேலைகளைச் செய்து இன்று மகாகும்பாபிஷேகமாகிய பெருஞ்சாந்தி வைபவத் தைச் சிறப்பாக நடத்துகின்றார்கள். இருபத்தோ ராம் நூற்றாண்டிலும் நமது அடுத்த சந்ததியின ருக்கும் அறிவொளி பரப்பும் ஞானதீபமாக எங்கள் கல்லூரி திகழ வித்தியாகணபதி, தண்டாயுத பாணி சமேத ஞான வைரவப் பெருமானின் திருவ ருள் கடாட்சம் பூரணமாகக் கிடைக்க வேண்டுமெ னப் பிரார்த்திப்போமாக!



கல்லூரி இந்து இளைஞர்கழகம்

## இறைநம்

இறைவன் நினைப்ப
தேவாலயமும் வித்திய
எண்ணம் இவ்விடங்கள
பயன் கடவுளைத் தெ
அனைத்துப் பெருமக்க

இந்த வகையில் க
ஊட்டுகின்ற ஆலயங்க
ஏற்றந்தருகின்ற உயர்
எழுந்தருளி அருள்புரி
நடைபெறுவது குறித்து

## தொன்

யாழ்ப்பாணத்தின் 
வரும் யாழ். இந்துக் கல்
தொன்மையும், மிக்கதா

யாழ்ப்பாண மக்கள்
கலாசாரமாகக் கொண்டு
வைரவப் பெருமானை 
யாழ்ப்பாணத்தில் பொது
கீழும் இருந்து அருள் 

அத்தகைய வைரவப்
வருவது எமது மாணவ
யாழ். இந்துக்கல்லூரியில்
கலையம்சத்துடன் கல்
கும்பாபி ஷேகமும் நடை

இவ்வாறே நாட்டின் 
ஒழுங்காக நடைபெறவு
இறைஞ்சுவோமாக!

## கல்லூரிய

சைவசமய கலாசார
அவர்களைப் பூரண ம
கல்லூரி இன்றைக்கு நூற்
இக்கல்லூரியின் காவற்
ஞானவைரவரே கல்லூரிய
விளங்குகின்றார்.

வைரவப் பெருமானி
பழைய மாணவர்களது மு
செய்து மனநிறைவு கா
பெருமானின் அருள் மன

## அருள்

யாழ்ப்பாணம் இந்து
மாணவர்களுக்கும் வண்
சிவஞான வைரவப் பெ
கல்லூரி மாணவர்கள்
முன்னணியில் திகழவும்
பெருமானே. எம் பெரும
யாவருக்கும் அவரது அ

## ஞானவை

இலங்கையில் வட
விடயங்களில் முன்னணி
மாணவர்கள் ஞானவைர
களிலும் சுடர்விட்டுப் பி
விளங்குவதற்கு மாத்திர
சிறந்த வாழ்வு வாழ்வதற்
வரும் காலத்திலும் ஞா
தொரு குறையுமின்றி வா

## ஞான வ

யாழ்ப்பாணம் இந்து
கல்வி கற்கும் சகல மா
யர்களையும், பிரதி அதிப
பரம்பொருளின் உருவம
வராமல் காக்க வேண்டு

# பாபிஷேக மலர்

## றைநம்பிக்கை ஊட்டும் ஆலயம்

இறைவன் நினைப்பை இன்றியமையாமல் முன்வைத்து இயங்கும் இரண்டு இடங்கள் ாலயமும் வித்தியாலயமும் ஆகும். திருவருள் எம்மை வழி நடத்துகின்றது என்ற ணம் இவ்விடங்களில் வெளிப்படையாகத் தோன்றக் காண்கின்றோம். கல்வியின் ன் கடவுளைத் தொழுது கருமங்களை நல்லபடி நிறைவேற்றுதல் என்பதையே னத்துப் பெருமக்களும் வற் புறுத்திச் சென்றுள்ளனர்.

இந்த வகையில் கல்விக்கூடங்களில் மாணவர்கள் மத்தியில் இறை நம்பிக்கையை டுகின்ற ஆலயங்கள் பலவற்றை நாம் காண்கின்றோம். யாழ். குடாநாட்டுக்கு ந்தருகின்ற உயர்தர பாடசாலையாக விளங்குவது யாழ். இந்துக் கல்லூரி. இங்கு ந்தருளி அருள்புரியும் ஸ்ரீ சிவஞான வைரவர் ஆலயத்துக்கு குடமுழுக்கு விழா _பெறுவது குறித்து நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## தொன்மை மிக்க ஆலயம்

யாழ்ப்பாணத்தின் பழம் பெருமையையும் இந்துப் பண்பாட்டையும் பேணிக் காத்து ம் யாழ். இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள வைரவப் பெருமான் ஆலயம் திருவருளும் ன்மையும். மிக்கதாகும்.

யாழ்ப்பாண மக்கள் சைவசித்தாந்தத்தில் ஊறியவர்களாகவும் கந்த புராணத்தினைக் சாரமாகக் கொண்டு வாழ்பவர்களாகவும் இருக்கின்ற போதிலும் சிவனின் அம்சமான ரவப் பெருமானை வழிபடுவதிலும் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் உடையவர்கள். ப்பாணத்தில் பொது இடங்களிலும் தனியார் காணிகளிலும் கிணற்றடிகளிலும் மரங்களின் ம் இருந்து அருள் பாலிப்பவர் வைரவப் பெருமான்.

அத்தகைய வைரவப் பெருமானுக்கு இந்துக் கல்லூரியிலும் ஆலயம் அமைத்து ஆராதித்து வது எமது மாணவர்களிடையே பக்தியையும் துணிவையும் வளர்ப்பதாக உள்ளது. இந்துக்கல்லூரியில் மிகச்சிறியதாக இருந்த ஆலயம் இன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்டு லயம்சத்துடன் கல்லூரியின் நடுநாயகமாக விளங்குகின்றது, இன்று புனருத்தாரண ாபி ஷேகமும் நடைபெறுகின்றது.

இவ்வாறே நாட்டின் எல்லா ஆலயங்களும் புதுப்பிக்கப்பட்டு நித்திய, நைமித்தியங்கள் சுகாக நடைபெறவும் நாட்டில் அமைதியும் சுபீட்சமும் ஏற்படவும் எம் பெருமானை றஞ்சுவோமாக!

**திரு. க. சண்முகநாதன்**
(அரச அதிபர், தலைவர், கல்லூரி பழைய மாணவர் சங்கம்)

## ல்லூரியின் கலங்கரை விளக்கு

சைவசமய கலாசாரங்களோடு கல்வியிலும் இளைஞர்களைத் தகுதியுடை யவர்களாக்கி களைப் பூரண மனிதர்களாக வளர்த்தெடுக்கும் நோக்கோடு யாழ்ப்பாணம் இந்துக் ரி இற்றைக்கு நூற்றுப்பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டது. அப்பொழுதே ல்லூரியின் காவற் கடவுளாக வைரவ சுவாமியை கல்லாரி ஸ்தாபகர்கள் நிறுவினர். வைரவரே கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் காவலராய் ங்குகின்றார்.

வைரவப் பெருமானின் ஆலயமானது இன்று கம்பீரமாக எழுந்து நிற்பதற் குக் காரணம் ய மாணவர்களது முயற்சியும் ஒத்துழைப்புமாகும். இந்த ஆலயத்தை மகா கும்பாபிஷேகம் து மணிநிறைவு காணும் இவ்வேளை கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் வைரவப் மானின் அருள் மழையில் நனைந்து அவரின் அருளை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

**திரு. பொ. மகேஸ்வரன்**
*பிரதி அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி*

## ருள் பாலிக்கும் பெருமான்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி கல்லூரிச் சமூகத்துக்கும் வர்களுக்கும் வண்ணார்பண்ணை மக்களுக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ான வைரவப் பெருமானுக்கு இன்று கும் பாபிஷேகம் நடைபெறுகின்றது. இந்துக் ரி மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கவும் நிறைந்த பெறுபேறுகள் பெற்று ணியில் திகழவும் என்றும் துணை நின்று அருள் புரிபவர் ஸ்ரீ சிவஞான வைரவப் மானே. எம் பெருமானின் இன்றைய இந்தக் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று ருக்கும் அவரது அருள் கிடைக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"சர்வோ ஜனகா சுகிர்னோ பவந்து"

**பிரம்மஸ்ரீ கா. சிதானந்த சர்மா.**
*(ஆலய அர்ச்சகர்)*

## ானவைரவர் நலமெலாம் தருவார்

லங்கையில் வடபகுதியில் உள்ள கல்லூரிகளில் யாழ். இந்துக் கல்லூரி பல ங்களில் முன்னணியில் திகழும் கல்லூரியாகும். அக் கல்லூரியில் கல்வி பயிலும் ர்கள் ஞானவைரவரைத் தினமும் துதித்து வருவதால் கல்வியிலும் ஏனைய கலை ம் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றனர். பல்லாயிரக் கணக்கானோர் படிப்பிற் சிறந்து குவதற்கு மாத்திரமன்றிச் சிறந்த தொழில் முயற்சிகளைத் தேடிக் கொள்வதற்கும் வாழ்வு வாழ்வதற்கும் ஞானவைரவரின் அருளே காரணமாக அமைந்துள்ளது. எதிர் காலத்திலும் ஞானவைரவரை வழிபட்டால் நலம்யாவும் நிறைவாகப் பெற்று யாத குறையுமின்றி வாழலாம். எல்லோரும் நலமாக வாழ ஞானவைரவர் அருள் புரிவாராக.

**திரு. எஸ். தில்லை நடராஜா,**
*மேலதிக செயலாளர்,*
*கல்வி, உயர் கல்வி அமைச்சு.*

## ான வைரவர் அருள்வாராக

ழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 6 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆம் ஆண்டு வரை கற்கும் சகல மாணவர்களையும், சகல துணை ஆளணியினரையும், சகல ஆசிரி ரையும், பிரதி அதிபர், அதிபர் அவர்களையும் எங்கள் கல்லூரி மத்தியில் வீற்றிருக்கும் ருளின் உருவமாகிய ஞானவைரவப் பெருமான் தமது அருளால் ஒரு தீங்கும் காக்க வேண்டும் என்று பக்தியுடன் வேண்டி நிற்கின்றேன்.

**கலாநிதி தா. சோமசேகரம்,**
*தலைவர், பழைய மாணவர் சங்கம், கொழும்பு.*

## அதிரடி அரங்கு

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாடும் நோக்கோடு வலிகாமத்தில் ஒரு பகுதியில் உள்ள படையினர் தத்தமது பகுதி மக்கள் மற்றும் வர்த்தகர்களின் 'ஆதரவைத்' திரட்டும் முயற்சியில் மும்முரமாக இறங்கியுள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதியில் உள்ளோரைஅழைத்து ஒரு கூட்டமும் வைத்தனராம். அதில் பேசிய இராணுவ அதிகாரி ஒருவர் - "எங்களில் அதிகாரி ஒருவர் உட்பட ஆறுபேர் இங்கு திருமணம் புரிந்துள்ளார்கள். இன்னும் சிலர் திருமணம் செய்யவுள்ளார்கள். நீங்கள் எல்லோரும் ஒருவகையில் எங்கள் உறவினர் அல்லது எங்கள உறவினரின் ஊரவர்கள். உங்களோடு சேர்ந்துதான் நாம் புத்தாண்டைக் கொண்டாட வேண்டும். எனவே நிதி முதல் சகல ஆதரவையும் நீங்கள் தரவேண்டும்" - என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

நான்கு வருடங்களில் இன உறவுப் பாலம் எவ்வளவு கட்டப்பட்டிருக்கிறது என்பதற்கு இதனையும் ஓர் உதாரணமாகக் கொள்ளலாம் அல்லவா?

நிலைமை எங்கு போகின்றது என்று சம்பந்தப்பட்டோருக்குப் புரிந்தால் சரி.

* * * *

மல்லாகம் பகுதியில் இருந்து வந்த கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் இவை:-

"ஊர் மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் மல்லாகம், கே.கே.எஸ். வீதியில் கோவில்கள், பிரதேச வைத்தியசாலை, பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புக்கள், குடியிருப்புக்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் மதுபான சாலை ஒன்றை அமைப்பதற்குப் பிரதேச சபை அனுமதி அளித்துள்ளது"

- இத்தகவல் முழுவதும் உண்மைதானா என்பதனை ஊர்ஜிதம் செய்யும் முயற்சியில் நாம் இன்னும் இறங்கவில்லை. எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தகவலுக்காக இதைக் காதில் போட்டுவைக்கிறோம். தகவல் உண்மையாயின் உரிய நடவடிக்கை எடுப்பது அதிகாரிகளின் பொறுப்பு.

* * * *

தொலைபேசி மூலம் புலிகளின் பெயரைக் கூறி மிரட்டிப் பணம் பறிக்க முயன்ற - யாழ். நகரப் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த - 16 வயது மாணவன் ஒருவன் வகையாக மாட்டிக் கொண்டுள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கப்படுவதாவது:-

சென். பற்றிக்ஸ் வீதியில் வசிக்கும் இந்த மாணவன் அதே பகுதியில் வசிக்கும் ஒருவரைக் கடந்த மாதம் முதல் கடிதம் மூலமும், தொலைபேசி ஊடாகவும் புலிகளின் பெயரைக் கூறி, 50 ஆயிரம் ரூபா பணம் செலுத்தப்படவேண்டுமென்று மிரட்டி வைத்ததாகவும்-

இதே போன்ற கடந்த ஞாயிறன்று காலை 10 மணியளவில் பணம் கேட்டு இவர் தொலைபேசியில் மிரட்டியதாகவும் -

அன்றையதினம் மீண்டும் தொலைபேசி மூலம் தான் குறிப்பிடும் இடத்துக்குப் பணத்துடன் வராவிட்டால் கொலை செய்யப்போவதாக அவர் பயமுறுத்தியதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

மிரட்டலுக்கு உள்ளானவரின் குடும்பத்தவர்கள் உஷார் அடைந்து யாழ். தொலைத் தொடர்புப் பிரிவினருக்கு இது குறித்துத் தெரியப்படுத்தி, மிரட்டல் தொலைபேசி அழைப்புச் செய்யப்பட்ட இடத்தைத் தெரிந்து கொண்டனர்.

சுண்டிக்குளிப் பகுதியில் உள்ள ஒரு பொதுத் தொலைபேசிக் கூண்டில் இருந்தே மிரட்டல் விடுக்கப்பட்டது அறியவந்ததை அடுத்துச் சம்பந்தப்பட்டவர்கள் குறித்த தொலைபேசிக் கூண்டுள்ள பகுதியில் மறைந்து மிரட்டல்காரனைப் பிடிப்பதற்காகக் காத்திருந்தனர்.

அவர் மீண்டும் அதே தொலைபேசிக் கூண்டுக்கு வந்து தொலைபேசி மூலம் சம்பந்தப்பட்டவரை மிரட்டும்போது நேரடியாக - கையும் மெய்யுமாக - மாட்டிக் கொண்டார்.

பின்னர் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட இவரைப் பொலீஸார் கடந்த திங்களன்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அவரை விசாரித்த நீதிவான் இ. த. விக்னராஜா அவரை 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். வழக்கு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

* * * *

சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்தி சமூகத்தை ஒழுங்காக இயக்கத்தக்கவர்கள் இல்லாததால் சமூகச் சீரழிவுகள் எல்லை மீறிப் போவது குறித்து பலதடவைகள் இந்தப் பத்தியில் குறிப்பிட்டாயிற்று.

அந்த வரிசையில் ஆலய உற்சவகாலங்களில் இளைஞர் குழுக்கள் புரியும் அட்டகாசமும் இப்போது எல்லை மீறி வருகின்றது. குமர்ப் பெண்கள் என்று இல்லாமல் திருமணம் புரிந்த யுவதிகள் மீதும் சேஷ்டை விடுகின்றன இளைஞர் குழுக்கள்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவத்தின் போதும் மாலை வேளைகளில் இந்தத் 'திமிர்'க் குழுக்கள் தமது அடாவடித்தனத்தைக் காட்டி வருகின்றன. கடந்த ஞாயிறன்று தனது கணவனுடன் வந்த இளம் பெண்ணுடன் ஓர் இளைஞர் குழு தகராறு பண்ண, கணவன் எதிர்க்கப் போக, பெரிய அடிதடி, கைகலப்பு கலவரமாகப் போய்விட்டது.

இத்தகைய திருவிளையாடல்கள், லீலைகளுக்கு முற்றுப்புள்ளி இல்லாமலா போகப்போகிறது என்கிறார் பழைய குடாநாட்டு நிலைமை புரிந்த ஒருவர்

**-மின்னல்-**

KOBE KOBE KOBE KOBE KOBE

நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?

உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.

உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 4
Tel:589992

'KOBE தரத்தின் சின்னம்'

# புத்தாண்டை ஒட்டி நகரில் கைத்தொழில் கண்காட்சி

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு — கிழக்கு மாகாணசபை தொழிற்றுறைத் திணைக்களம் ஒரு கண்காட்சியையும் மலிவு விற்பனையையும் ஒழுங்கு செய்துள்ளது. இந்தக் கண்காட்சி இன்று முதல் மூன்று தினங்கள் காலை 9.00 மாலை 5.00 மணிவரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்தக் கைத்தொழில் கண்காட்சியை ஒழுங்கு செய்வதிலே தொழில்துறைத் திணைக்களத்துடன் இணைந்து கிராம அபிவிருத்தித் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, பனை அபிவிருத்திச் சபை, தனியார் கைத்தொழில்நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன தமது பங்களிப்பைச் செலுத்துகின்றன.

இந்தக் கண்காட்சியின் நோக்கம் எமது மாவட்டத்தில் இருக்கின்றகைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதும், சில புதிய உற்பத்தி வகைகளை மக்களுக்கு அறிமுகம் செய்வதுமாகும். எமது பிரதேசம் கடந்த இருசகாப்தங்களாக யுத்த அனர்த்தங்களைச் சுமக்கின்ற பிரதேசமாக இருந்து வருகின்றது. ஒரு பிரதேசத்தின் பொருளாதார வளம் கட்டியெழுப்பப்படுவதற்கு கைத்தொழில் விருத்தி மிக மிக அவசியமானதாகும். எனவே இங்கே கைத்தொழில் முயற்சியாளர்களது செயற்பாடுகள் அக்கறையோடு அணுகப்படுவது அவசியமாகின்றது. ஒழுங்கான உட்கட்டுமான வசதிகளோ, நிறுவனம்சார் நிதி வசதிகளோ அற்ற நிலையிலேயே எமது தொழில் முயற்சியாளர்கள் தமது முயற்சிகளை முன்னெடுக்கின்றனர். இவர்களது இடைவிடாத இந்த முயற்சியாண்மைப் பண்பை உண்மையிலேயே நாம் பாராட்ட வேண்டும். எனவே இக் கண்காட்சியில் இவர்கள் கலந்துகொண்டு தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதன் மூலம் சிறிதளவேனும் உற்சாகம் அடைவார்கள் என நாம் நம்புகிறோம்.

இந்தக் கண்காட்சியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு தொழில் முயற்சியாளர்கள் உற்சாகமுடன் பங்குபற்ற முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க விடயமே, இதிலே தோற்பொருள் உற்பத்திகள், தும்புசார் உற்பத்திகள், தைத்த ஆடையணிகள், கைத்தறிப் புடைவைகள், உலோக உற்பத்திகள், சிமெந்து உற்பத்திகள், மரச் சிற்பங்கள் என்பன காட்சிப் படுத்தப்படவுள்ளன. கண்காட்சியின் முடிவில் சிறந்த உற்பத்திகளுக்கும், காட்சிப் படுத்தல் முறைமைகளுக்குமாக சிறந்த தொழில் முயற்சியாளர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

இங்கே காட்சிப்படுத்தப் படவுள்ள பொருள்களில் பெரும்பாலானவை எமது உள்ளூர் மூலப்பொருள்களையும், எமது மனித வளங்களையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டவை. எனவே எமது பிரதேசம் சார் உள்ளூர் வளங்களையும், மனிதவள முன்னேற்றத்தையும் அறிந்துகொள்ள இக்கண்காட்சி அரிய சந்தர்ப்பம்.

மேற்படி கண்காட்சியை யாழ். மாவட்டத்தில் இருக்கும் அனைத்து மக்களும் கண்டு பயனடைவார்கள் என நம்புகின்றோம். குறிப்பாக பாடசாலை மட்டத்திலும், பல்கலைக்கழக மட்டத்திலும் வகுப்பறைகளுக்கு வெளியேயும் அறிவைத் தேட வேண்டிய புதிய கல்விச் சீர்திருத்தத்தின் குரல் ஒங்கி ஒலிக்கின்ற விஞ்ஞான யுகத்தில் நாம் நிற்கின்றோம். எனவே மாணவர் சமூகம் பெருமளவில் வந்து கலந்துகொண்டு தொழில்துறை தொடர்பில் தமது அறிவுத் தேடலைப் பூர்த்தி செய்ய இந்த கண்காட்சி வாய்ப்பளிக்கும்-

★

## உள்ளூராட்சி மன்றங்களில் உதவிச் செயலாளர் ஆளணி!

### மாகாணச் செயலாளர் தகவல்

வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களில் உதவிச் செயலாளர் [Assistant Secretaries] ஆளணி புதிதாக உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை வடக்கு — கிழக்கு மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு வீதி அபிவிருத்தி அமைச்சு செயலாளர் க.பரமலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

வடக்கு — கிழக்கு பகுதிகளில் உள்ள 72 (பிரதேச சபை, நகரசபை, மாநகர சபை) உள்ளூராட்சி நிறுவனங்களுக்கே மேற்படி உதவிச் செயலாளர் ஆளணியினை உருவாக்கி நிறுவன வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானாவை கடித மூலம் கேட்டுள்ளார்.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் தற்போது கடமையாற்றும் செயலாளர்களுக்கு உதவியாக நிர்வாகக் கடமைகளைக் கவனிக்கவே மேற்படி புதிய ஆளணி விரைவில் உருவாக்கப்படும் எனவும் —

இதற்குரிய அனுமதி கிடைக்குமிடத்து ஜூன் முதலாம் திகதி புதிய நியமனம் செய்யப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-185)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

சிவயோக சுவாமிகளைக் குருவாகக் கொண்ட சிவ தொண்டர் ஏரம்பு தம்புவின் மறைவை ஒட்டிய ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இல. 98/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி எனும் விலாசத்தில் அமைந்துள்ள புங்குடுதீவு கிராம இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் வெ. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் அஞ்சலி உரையை க. திருநாவுக்கரசு நிகழ்த்துவார். தொடர்ந்து மலர் அஞ்சலி, தேவார அஞ்சலி, கற்சிந்தனை அஞ்சலி, தீப அஞ்சலி என்பன இடம்பெறவுள்ளன.

## தீவகத்தில் சுற்றுலா

யாழ்.பல்கலைக்கழக பொது நிர்வாகப் பட்டப்பின் படிப்பு மாணவர்கள் தீவகத்திற்கான கல்விச் சுற்றுலா ஒன்றினை அடுத்தவார இறுதியில் மேற்கொள்ளவுள்ளனர்.

இரண்டு நாள்கள் மேற்கொள்ளப்படவுள்ள இக் கல்விச் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கொண்டுள்ளார். இதேவேளை —

கடந்த இரு வாரத்திற்கு முன்னர் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் சூழல் சமமின்மையை மாணவர்கள் ஆராய்ந்துள்ளனர். (ஐ-185)

## உயிரிழந்த புலிகளின் விவரம்

வவுனியா, ஏப்ரல் 9

'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்த மேலும் ஏழு பேரின் பெயர் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

★ நிர்மலா (செல்வரட்ணம் விஜயலக்ஷ்மி - பூநகரி)

★ புவனா (தம்பிராசா சுதாஜினி - யாழ்ப்பாணம்)

★ கப்டன் இனியவன் (கதிர்காமர் தயாபரன் - யாழ்ப்பாணம்)

★ கப்டன் மணியரசன் (சிவம் சிவமயம் - யாழ்ப்பாணம்)

★ மேஜர் இளவரசன் (செல்வராசா அற்புதன் - யாழ்ப்பாணம்)

★ பிறையரசி (டானியல் (ஞானஸ்மேரி - பரந்தன்)

★ மேஜர் தமிழினியன் (காத்தாமுத்து கந்தசாமி - மட்டக்களப்பு)

(சு)


லைடனின் ◄——► குதூகல மலிவு விற்பனை

பூத்திடும் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!

01-04-2000 முதல் 12-04-2000 வரையுமே!

சகலவிதமான ஆடைத் தெரிவுகளுக்கும்
விசேட கழிவு உண்டு.

என்றென்றும் உங்கள் தேவையைப்
பூர்த்திசெய்பவர்கள்.

லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி, வீதி,
யாழ்ப்பாணம். (சி/11772)



மானிப்பாய்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

ஏல விற்பனை

சங்கத்திலுள்ள பழைய உதிரிப்பாகங்களான லொறி ரயர், லொறி பற்றிகள் என்பன 22—04—2000 ஆம் திகதி சனிக்கிழமை சங்க முன்றலில் வைத்து காலை 10.00 மணிக்கு ஏல விற்பனை மூலம் விற்கப்படவுள்ளன. ஏல விற்பனையில் பொருள்களை எடுப்பவர்கள் பணம் முழுவதையும் அன்றைய தினமே சங்கத்தில் செலுத்துதல்வேண்டும். சங்கக் கடமை நாள்களில் பொருள்களைப் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்

(சி-11769)



பெண் காரியதரிசி தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பெண் காரியதரிசி தேவை. கொம்பியூட்டர் வேலைதெரிந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். குறைந்தது G. C. E. A/L பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆங்கில அறிவு அவசியம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். 30 வயதுக்குட்பட்ட நல்ல தோற்றமுடையவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில்
Secretary என்று குறிப்பிடவும்
வி. இல. 1037, மே/பா உதயன்.

(75117)



உ

குப்பிழான் வீரமனை
கன்னிமா கௌரி அம்பாள் கோயில்
பங்குனி 2000 ஆண்டு
அலங்கார உற்சவம்

| | | | |
|---|---|---|---|
| 09. 04. 2000 | ஞாயிறு | பி. ப. 4. 00 | மணி ஆரம்பம் |
| 15. 04. 2000 | சனி | பி. ப. 4. 00 | மணி வேட்டைத் திருவிழா |
| 16. 04. 2000 | ஞாயிறு | பி. ப. 4. 00 | மணி சப்பரத் திருவிழா |
| 17. 04. 2000 | திங்கள் | காலை 10. 30 | மணி தேர் திருவிழா |
| 18. 04. 2000 | செவ்வாய் | காலை 11. 30 | மணி தீர்த்தத் திருவிழா |
| 19. 04. 2000 | புதன் | பி. ப. 4. 00 | மணி பூங்காவனம் |

ஆலய குரு சிவஸ்ரீ சி. கிருஷ்ணசாமிக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

(சி/11771) — பரிபாலன சபை


## மரண அறிவித்தல்கள்

குரும்பசிட்டி

### குட்டித்தம்பி பொன்னுத்துரை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கு. பொன்னுத்துரை அவர்கள் நேற்று 08-04-2000 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் ரமணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான, செல்லத்துரை, இரத்தினம் மற்றும் திருமதி அன்னம்மா சோமசுந்தரம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று09-04-2000ஞாயிறு மு.ப. 11-30 மணியளவில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:–
பொ. ரமணி
(மனைவி)

கலையரங்க முன்ஒழுங்கை,
உரும்பிராய்ச் சந்தி.

(75241)

திருமதி

### சுப்பிரமணியம் (சு.சு.) சின்னப்பிள்ளை

மட்டுவில் சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் (சு. சு.) சின்னப்பிள்ளை நேற்று (08-04-2000) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் சுப்பையா — அமரர் பூலோகம் ஆகியோரது அன்பு மகளும் அமரர் சுப்பிரமணியத்தின் (சு. சு.) அன்பு மனைவியும் அமரர் சுந்தரம், அமரர் பொன்னம்மா ஆகியோரது அன்பு மருமகளும் அமரர் கந்தசாமியின் அன்புச் சகோதரியும் தவமணிதேவி, அமரர் சந்திரன், பரஞ்சோதி (துரை), சந்திரசேகரம் (கிளி), கிருஷ்ணமூர்த்தி (சின்னக்கிளி) ஆகியோரது அன்புத் தாயாரும் கதிர்காமநாதன், சாந்தா, பேரின்பராணி, பத்மதேவி ஆகியோரது அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(9-4-2000) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்: பரஞ்சோதி (துரை)
மகன்: சந்திரசேகரம் (கிளி)

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(75238)

# காங்கேசன் தடுப்பு முகாமில் மூன்று இந்திய மீனவர்கள்

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று இந்திய மீனவர்கள் தற்பொழுது காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

சகோதரர்களான இரத்தினவேல் சேகர் (வயது 36), இரத்தினவேல் ராஜா (வயது 20) உட்பட சிவானந்தன் ரவி (வயது 33) ஆகிய மூவருமே கடந்த 30 ஆம் திகதி கடற்பரப்பில் வைத்துக்கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களைக் கைது செய்த கடற்படையினர் வல்வெட்டித்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். பின்பு இவர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை காங்கேசன் துறை கைதிகள் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அங்கு சென்று வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என் ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

மீனவர் கொலனி, பெரிய வாணகிரி, சீர்காழியைச் சேர்ந்த மூன்று மீனவர்களும் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் படகு திசை மாறிச் சென்றதை அடுத்து தாம் கைது செய்யப்பட்டதாகக் கூறியதாக ஆணைக் குழு அதிகாரி தெரிவித்தார். (ஐ-7-9-10)

# இடம்பெயர்ந்தோருக்கு தற்காலிக பங்கீட்டு அட்டை

தென்மராட்சி, ஏப்ரல் 9

பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வேளையில் பங்கீட்டு அட்டையை கொண்டு வராதவர்களுக்கு தற்காலிக பங்கீட்டு அட்டை மீசாலை புத்தூர் சந்தியில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்தில் வழங்கப்படுகிறது.

தற்காலிக பங்கீட்டு அட்டை பெற சமர்ப்பிக்கும் கடிதத்தில் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியவற்றின் இலக்கங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்தார்.

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் விவரங்களும் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-117)

# பொலீஸ் நிலையத்தில் தமிழ் மாணவிக்கு இம்சை

கொழும்பு, ஏப்ரல் 9

முகத்துவாரத்தில் இருந்து வெள்ளவத்தைக்கு ரியூசனுக்குச் சென்று கொண்டிருந்த தமிழ் மாணவி ஒருவரைக் கைது செய்த பொலீஸார் அவரை நிலையத்தில் தடுத்து வைத்து கூரிய ஆயுதங்களால் அவரைத் தாக்கியுள்ளதுடன் சிகரட்டினால் காயமும் ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப — தலைவர் வீ. ஆனந்தசங்கரி பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த திங்கட்கிழமை தமிழ் மாணவி ஒருவர் முகத்துவாரத்தில் இருந்து வெள்ளவத்தைக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்த சமயம் விகாரமாதேவி பூங்காவடியில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அவரை முகத்துவாரம் பொலீஸ் நிலையத்துக்கு ஜீப்பில் அழைத்துச் சென்ற பொலீஸார் அங்கு அவரைத் தடுத்து வைத்தனர்.

அந்த மாணவியின் புத்தகங்களைப் பறித்து எறிந்த பொலீஸ்கான்ஸ்டபிள் ஒருவரும் பெண் பொலீஸ் ஒருவரும் கூரிய கத்தியால் அவரின் கழுத்திலும் இருகைகளிலும் காயம் ஏற்படுத்தினர். சிகரட் அடிக்கட்டையால் சுட்டுக் காயப்படுத்தினர்.

அதன் பின்னர் அந்த மாணவி சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் முன் ஆஜர் செய்யப்பட்டார். அவர் அந்த மாணவியை விசாரித்துப் பின்னர் விடுதலை செய்தார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்கள் கண்டிக்கப்பட வேண்டும் — என்றுள்ளது. (ஐ-3-9)

# இளைஞர் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

கடந்த மாதம் 31 ஆம் திகதி இராணுவத்தால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் விசாரணைகளின் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மலர்மகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த பயில்வாகனம் மதிகரன் (வயது 28) என்பவரே கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டதாக உறவினர்களால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-10)

# உசனிலும் குடத்தனையிலும் உதவி மையங்கள் இயங்கும்

## தென்னிந்தியத் திருச்சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

இடம்பெயரும் மக்களுக்கு அவசர உதவிகளை வழங்கத் தென்மராட்சியில் உசனிலும் —

வடமராட்சி கிழக்கில் குடத்தனையிலும் —

இரு உதவி மையங்களைத் தென்னிந்தியத் திருச்சபை ஆரம்பித்துள்ளது

தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார் அடங்கிய குழு ஒன்று ஒட்டுவெளி, உசன், மருதங்கேணி, கரம்பகம் ஆகிய இடங்களுக்குக் கடந்த புதன்று சென்றது.

அங்குள்ள மக்களின் கஷ்டங்களை நேரில் ஆராய்ந்த பின்பே இந்த மையங்களைத் திறக்க முடிவு செய்யப்பட்டதாகத் தென்னிந்தியத் திருச்சபையின் மதகுரு ஒருவர்தெரிவித்தார்.

இதேவேளை—

ஒட்டுவெளி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தங்கி இருந்த 10 குடும்பங்கள் படையினரின் அனுமதியுடன் மிருசுவிலை வந்தடைந்தன. (ஐ-3-6)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் திரு. க சிவாஜி
அவர்களின் அன்பு மாமனாரும்
எமது கல்லூரி முன்னாள் ஆங்கில ஆசிரியை
திருமதி க. சிவாஜி அவர்களின் தந்தையுமாகிய

### சின்னத்தம்பி திருநாவுக்கரசு

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலர்கள், கல்லூரி அபிவிருத்திச் சபை,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை. சுன்னாகம். (75193)

## ஓராண்டு நினைவு கூரலும் நன்றித் துதி ஆராதனையும்

"இது முதல் கர்த்தருக்குள் மரிப்பவர்கள் பாக்கியவான்கள்"

பிறப்பு
14–10–1953



கர்த்தருக்குள்
08–04–1999

### திருமதி துரைசிங்கம் மீனாட்சி
(அன்னாள்)

இன்று (09-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆராதனை அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள், விசுவாசிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

மகள்: துரைசிங்கம் கவிதா

சகோதரர்: ஆழ்வார் ரத்தினம்(B.A ஆசிரியர், புத்தளம்) துரைராஜா நேசம்மா, பொடித்தம்பி கனகம்மா, ஆழ்வார் மணியம், ஆழ்வார் கண்ணுத்துரை

பேறாமக்கள்: துரைராஜா தேவன் (சுவிஸ்), திருமதி துரைராஜா மனோகரி, சூரியகாந்தன் பவானி (சுவிஸ்), பொடித்தம்பி சுரேகா, பொடித்தம்பி வசந்தகுமார் (ஜேர்மனி)

மைத்துனி: மணியம் பரமேஸ்வரி, கண்ணுத்துரை ராகினி (கனடா)

மருமகள்: கண்ணுத்துரை நிரோஷினி (கனடா)

இலந்தைக்காடு,
பருத்தித்துறை. (74930)

எதிர்காலத்தை வென்றிட முந்துங்கள் ..........!!

2000 ஆண்டின் புதிய பாடத்திட்டத்திற்கமைவான

## முழுமையான வினாவிடை நூல்கள்

- தரம் 10 சமூகக்கல்வியும் வரலாறும் விலை 65/-
- தரம் 7 சமூகக்கல்வியும் வரலாறும் விலை 35/-

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வழிகாட்டி நூல் விலை 30/-

யாழ். நகரிலுள்ள பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள தொடர்புகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்:

இல. 285, (ஆலடிச் சந்தி), பலாலி வீதி, கந்தர்மடம்.
திரு ஐ புவனேந்திரன் (விரிவுரையாளர்), (75200)

ஓம் தத் சத் ஓம்

## சிவயோக சுவாமிகளைக் குருவாகக் கொண்ட சிவதொண்டர் ஏரம்பு தம்பு அவர்களின் மறைவுக்காக

தோற்றம்: 17-03-1925 மறைவு: 31 03 2000 கொழும்பில்

- அஞ்சலி
- ஆத்மசாந்திப் பிரார்த்தனை
- இரங்கல்

இடம்: புங்குடுதீவு கிராம இல்லம், ஆனைப்பந்தி,
98/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

காலம்: 09-04-2000 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2-30 மணி

யாழ். மாநகராட்சி ஆணையாளர்
திரு. பொ. பாலசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

வரவேற்பும் அஞ்சலி நிகழ்வுரையும்:- திரு க. திருநாவுக்கரசு அவர்கள்

மலராஞ்சலி சமர்ப்பணம்:- செல்வி பொ. ஜமுனாதேவி அவர்கள் (வட இலங்கை சர்வோதயம்)

தேவார அஞ்சலி:- பண்ணிசையாளர் எஸ். ஆர். திருஞானசம்பந்தன் அவர்கள்

நற்சிந்தனை அஞ்சலி:- செல்வி க. புஸ்பமணி அவர்கள் (யோகசுவாமிகள் மடாலயம், புங்குடுதீவு)

திருவாசக அஞ்சலி:- பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் அனைவரும்

தீப அஞ்சலி:- பிரம்மஸ்ரீ பா. நகுலேஸ்வரசர்மா அவர்கள் (சிவதொண்டன் பூசகர்)

அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

- "எப்பவோ முடிந்த காரியம்" — செல்லப்பா சுவாமிகள்
- "நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா" — யோகர் சுவாமிகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

"புங்குடுதீவு கிராம இல்லம்"
98/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

அஞ்சலி நிகழ்வு ஒழுங்கு
புங்குடுதீவு மக்கள் சார்பிலும்
யாழ். சிவதொண்டர் சார்பிலும்
வட இலங்கை சர்வோதயம்.

(75204)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேக தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும். (க)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 9

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் பூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-30)

★ ★ ★

மீசாலை வடக்கு, வேம்பிராய் கலட்டியிற் பிள்ளையார் ஆலய முதலாவது மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-117)

★ ★ ★

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாணப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-117)

★ ★ ★

பருத்தித்துறை கோட்டடி வாசல் சண்டிகா பரமேஸ்வரி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (க-15)

★ ★ ★

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (க-15)

★ ★ ★

அளவெட்டி—நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய வருடாந்த ஸ்ரீராம நவமித்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

சகஸ்ரநாம அர்ச்சனை, சங்காபிஷேகம் மற்றும் ஸ்ரீ ராமபிரான் வீதிவலம் வருதலும் அன்னதானமும் அன்றையதினம் இடம்பெறும்.

சிவஸ்ரீபரமசண்முகசுந்தரம் குருக்கள் கிரியைகளை நடத்துவார். (ஐ-க-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

கோப்பாய் தெற்கு மாந்தோப்பு மாரியம்மன்[பேய்ச்சி அம்மன்] ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 10. நாள்கள் உற்சவம் நடைபெறும். [ஐ-10]

# சுகாதார சேவைகளுக்கு பயிலுநர்கள் சேர்ப்பு

## ஜூன் 5 வரை விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

சுகாதார சேவைகளில் உள்ள பல பதவிகளுக்கு ஆள்களை நியமிப்பதற்காகப் பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்ள சுகாதார சேவைகள் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரிஉள்ளது.

இது தொடர்பான விவரங்கள் கடந்த மாதம் 16 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ மருந்தாளர்கள்.
★ மருத்துவ ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர்கள்.
★ இயன் மருத்துவர்கள்.
★ கதிரியக்கவியலாளர்.
★ துறைசார் சிகிச்சையாளர். (ஒக்கிபேஷனல் தெரபிஸ்ற்)
★ கண் மருத்துவ தொழில் நுட்பவியலாளர்கள்.
★ பூச்சியியல் உதவியாளர். (என்டோமோலொஜிகல்)
★ பற்சிகிச்சைத் தொழில் நுட்பவியலாளர்கள்.
★ பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்.
★ நுண்கருவியாளர்கள்.
★ கார்டியோகிராபர்ஸ்.
★ எலக்ட்ரோ என்செவலோகிராப் ரெக்கோடிஸ்ற்.
★ மருந்துக் கலவையாளர்.
★ பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர்கள்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி அன்றோ, அதற்கு முன்னதாகவோ கிடைக்குமாறு விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 'சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலுவலகம், "சுவசிறிபாய", இலக்கம் 385, பத்தேகம விமலவன்ச மாவத்தை. கொழும்பு—10' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பின் பிரதியினைக் கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' பணிமனையில் வேலை நேரங்களில் பார்வையிடலாம். (ஐ-ரி)

## குருமுதல்வர் ஆராதனை விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 19ஆவது ஆண்டுக்குருபூசை ஆராதனை விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் நடைபெறும்.

காலை 10 மணிக்கு யாக பூஜையும் — காலை 11 மணிக்கு குருமூர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமிக்கு சங்காபிஷேகமும்நண்பகல்12மணிக்கு பூசை, திருமுறை, அர்ச்சனை கோ பூசை என்பன இடம் பெற்று நண்பகல் 12.30 மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு அகில இலங்கைத் திருமுறை மன்றம் வழங்கும் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கு இடம் பெறும். பிற்பகல் 3 மணிக்கு பெரியபுராணப் படிப்பு நடைபெறும். (க)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

நல்லூர், ஏப்ரல் 9

முயற்சி கணனிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகப் பயிற்சி மண்டபத்தில் நடைபெறும்

தலைவர் அ. நல்லதம்பி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இணைப்பாளர் விபி கெனத் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

முயற்சித்திறன் விருத்தி மையத்திலும் அகதிகள் புனர்வாழ்வுக்கழக கணனிப்பயிற்சி நிலையத்திலும் 1998, 99ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கு இவ் வைபவத்தில் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (க-111)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னபூரணி கனகசபை

நயினாதிவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அன்னபூரணி கனகசபை நேற்று 08-04-2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை வள்ளியம்மையின் அன்பு மகளும் சத்தியசீலன் (வைத்திய கலாநிதி), தர்மசீலன்(நோர்வே), கிருபாசீலன்(சவுதி அரேபியா), பிரபாலினி (ஆசிரியை - வவுனியா), ஜீவசீலன் (பலாலி ஆசிரிய கலாசாலை), ஜெயபாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜினி (வைத்திய கலாநிதி), சாந்தரூபி (ஆசிரியை, கொழும்பு), இரத்தினகுமாரி, உதயபாரதி, பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரியங்கரி, பிரதாயினி, மயூரேசன், ஜனனி, நயினி, ஜீவர்த்தனன், செந்தாழன், செந்தூரன், செந்தீசன், ஆகியோரின் பேர்த்தியும் அட்சலிங்கம்,(ஸ்ரீநாகைஇன், கொழும்பு), சரஸ்வதி (கனடா), கமலாம்பிகை (ஆசிரியை, கொழும்பு), நாகரெத்தினம் (ஆசிரிய ஆலோசகர் வர்த்தகம், யாழ்ப்பாணம் வலயம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09-04-2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
க. சத்தியசீலன்
(மகன்)

நயினாதீவு,
முதலாம் வட்டாரம். (75223)

## விதானை செல்லையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய முகாமையாளர், யானைச் சோடாக் கம்பனி, திருகோணமலை)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அவர்கள் 01—04—2000 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் தாவடிப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த நவரத்தினம் — சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், சிவேந்திராவின் பாசமிகு தந்தையும், மங்கையம்மா காலஞ் சென்றவர்களான நடராசா, குமாரசாமி ஆகியோரின் சகோதரனும், இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, காலஞ்சென்ற சபாநாதன், சிவனேஸ்வரி, ராஜகுமாரி, உதயகுமாரி ஆகியோரின் மைத்துனரும், மகேஸ்வரன் காலஞ்சென்ற கனேந்திரன், இராஜகுலேந்திரன், கோவர்த்தனராஜா ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அனைத்தும் இந்தியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கோவர்த்தனராஜா
(சகலன்)

34/3, உடையார் ஒழுங்கை,
பழம் வீதி,
கந்தர்மடம். (75234)


# வாழ்த்துகின்றோம்

தாவடி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், தாவடி இந்து மயான அபிவிருத்திச் சபைத் தலைவரும், தாவடி அபிவிருத்தி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்க செயலாளரும், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கப் பணிப்பாளர் சபை உறுப்பினரும், தாவடி ஸ்ரீ அம்பலவாணர் கந்தசாமி (முருகமூர்த்தி) கோயில் பரிபாலன சபை உறுப்பிவரும்,
சமூக சேவையாளருமாகிய

## திரு. இ. பரமேஸ்வரலிங்கம்

அவர்களுக்கு நீதி அமைச்சால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் வழங்கியதையிட்டு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம்.

தாவடி வடக்கு கிராம அலுவலர்.
தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.
தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்றம்.
தாவடி விவசாயிகள் அமைப்பு.
(75230)



உயரப்புலம், ஆனைக்கோட்டை

# அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 2000

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 09 - 4 - 2000 | காலை 10 | மணி |
| தேர்த்திருவிழா | 17 - 4 - 2000 | காலை 9 | மணி |
| தீர்த்தத் திருவிழா | 18 - 4 - 2000 | காலை 9 | மணி |
| கொடியிறக்கம் | 18 - 4 - 2000 | பி. ப 3 | மணி |
| சங்காபிஷேகம் | 19 - 4 - 2000 | காலை 10 | மணி |
| அன்னதானம் | 19 - 4 - 2000 | பகல் 12 | மணி |
| பூங்காவனம் | 20 - 4 - 2000 | பி. ப. 3 | மணி |

தினமும் மாலை 6-00 மணி தொடக்கம் கிருபானந்தவாரியாரின் சீடன் பிரசானக பூஷணம் நடேசன் சிவசண்முக மூர்த்தி [B. A.] அவர்களால் மகாபாரதம் தொடர் கதாப்பிரசங்கம் நடைபெறும்.

நிர்வாகசபை

விளம்பர உதவி:

உத்துங்க விநாயக அடியார்

(75225)

# மரவள்ளிப்பிட்டும் இலுப்பைப்பூ உருண்டையும்

# மதுரச்சுவை கிழங்கு உணவும் இப்போதில்லை

மாற்றங்கள் பல கண்டுவிட்ட யாழ்ப்பாண உணவுப் பாரம்பரியங்கள் பற்றி சித்திரைப் புத்தாண்டுகாலச் சிந்தனையாக மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா எழுதியுள்ள கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. 'உதயன்' வெளியீடான 'சஞ்சீவி'யில் இவர் கனடா பற்றி எழுதிய பிரத்தியேகச் சிறப்புக் கட்டுரை ஒன்றைக் கனடாவிலிருந்து வெளிவரும் 'தமிழர் தகவல்' எனும் பத்திரிகை அதனது பதினோராவது ஆண்டு சிறப்புமலரில் மறு பிரசுரஞ் செய்துள்ளது.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களது உணவுப் பாரம்பரியங்கள், நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், சேமிப்பு முறைகள் பல இன்று பாரியமாற்றங்களைக் கண்டுவிட்டன. எனது அப்பாச்சியின் வீட்டு வளவில் மூன்று பாரியஇலுப்பைமரங்கள் இருந்தன. அவை பூத்துச் சொரியும் காலங்களில் மரங்களின் கீழ் பாய்களைப் பரப்பி பூக்களைச் சேகரித்துக் காயப்போடுவது வழக்கம். காய்ந்த இலுப்பைப் பூக்களைக் காரம் சேர்த்து வறுத்து உரலிலிட்டுத் துவைத்துச் சூடாறமுன் எள்ளுருண்டைகளைப் போல பாகம் பண்ணிப் பாட்டி வீட்டிலுள்ளவர்களுக்குப் பரிமாறி தமது சகோதரங்களுடனும் பகிர்ந்து இடைவேளை உணவாகக் கொள்வார். சேகரிக்கப்படும் இலுப்பை விதைகளிலிருந்து பெறப்படும் எண்ணெய் பல சாடிகளில் வருடம் பூராவும் இருப்பில் இருக்கும். சகல உணவுத் தேவைகளுக்கும் யாழ்ப்பாண மக்கள் இலுப்பை எண்ணெயையேபயன்படுத்திவந்தனர். மகளிரின் மருத்துவத் தேவைகளுக்கு மாத்திரம் எள் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. அன்றைய குடாநாடு இலுப்பையெண்ணெய், வேப்பம் எண்ணெயில் தன்னிறைவு கண்டிருந்தது. வியாபாரம் செய்பவர்கள் இவற்றை வீடு வீடாகக் கொண்டு சென்று விற்பதுண்டு. வேப்பெண்ணெய் மருத்துவத் தேவைகளுக்காக மாத்திரமன்றி வீடுகளிலும் திருக்கோயில்களிலும் விளக்கேற்றுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. இலுப்பை எண்ணெயில் வதக்கப்படும் கடலுணவு வகைகள் சுவை மிகுந்தவை என்பது அந்தக்கால மக்களது அனுபவம்.

### ஆரோக்கியம் கருதி

பச்சிளம் குழந்தைகள்படுத்துறங்கும் இடங்களில் இரவு வேளைகளில் ஒரு பொழுது தானும் ஹரிக்கேன் விளக்குகள் எரிக்கப்படுவதில்லை. தாய்மார்கள் வேப்பெண்ணெய்ச் சுட்டி விளக்குகளையே ஏற்றிவைப்பார்கள். குழந்தைகள் விழித்திருக்கையில் நீல ஒளியாகப் பிரகாசித்து எரியும் அந்த விளக்குகளைப் பார்ப்பது அவர்களது கண்களுக்குத் தீங்கற்றது என்பது அவர்தம் அனுபவமாகும். அத்துடன் வேப்பம் வாசனை மிகச்சிறந்த கிருமிநாசனி என்பதும் அன்றுதொட்டு அனைவரும் அறிந்த விடயந்தான். வேப்பம் புகை இன்றைய நாசகார நுளம்புத்திரிபுகைபோன்றதல்ல. அந்தக்கால முதியவர்களிற் பலர் நமது தேகாரோக்கியம் கருதி சிறிதளவு வேப்பெண்ணெயை இடைக்கிடைபருகும்பழக்கமுமுடையவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

### மதுரச் சுவையான கிழங்கு வகைகள்

சுமார் பத்துத் தசாப்தங்களுக்கு முன்னர் வாழ்ந்த யாழ்ப்பாண மக்கள் அனைவரும் மிகச் சிறந்த கமக்காரர்களே. அவர்கள் தினை, குரக்கன், பயறு முதலியவற்றுடன் பல்வேறு வகையான கிழங்கு வகைகளையும் விளைவித்தனர். நீர்ப்பாசன வசதிகளற்ற கலட்டுத் தரைகளில் மாரி காலங்களில் வரகு சாகுபடி செய்தனர். மரவள்ளி, இராசவள்ளி, கொம்புவள்ளி, சிறுகிழங்கு வகைகள் கமங்களில் அபரிமிதமாக விளைவிக்கப்பட்டன. உண்ணத்

## மாற்றங்கள்பலகண்டுவிட்ட யாழ். உணவுப் பழக்கங்கள்

தெவிட்டாத சிறுகிழங்கு மதுரமான ஒருவித சுவை மிகுந்தது. பனாட்டு, ஒடியற் பிட்டு, புளுக்கொடியல் ஆகிய பண்டங்களுடன் மக்கள் தாம் விளைவிக்கும் அத்தனை பண்டங்களையும் மாறி மாறி ஒவ்வொரு வேளைக்கும் உணவாகப் பயன்படுத்தினர். அரிசித் தோசையைவிட சாமி அரிசித் தோசை சிறப்பானது. பனங்கட்டி சேர்த்துத் தயாரிக்கப்படும் குரக்கன் றொட்டியும் பிட்டும் குழந்தைகள் முதல் முதியவர் அனைவரும்புசிக்கக் கூடிய சுவை மிகுந்தவை. பகல் உணவுக்காகக் குரக்கன் பிட்டு அவிக்கும் வேளைகளில் அதனுடன் கீரை கலந்து அவிப்பதுமுண்டு. இதற்கு வெந்தயம் அல்லது முருங்கைக்காய்க் குளம்பு மெத்த விசேடம். கடலுணவு வகைகள் சேர்த்துத் தயாரிக்கப்படும் ஒடியற்கூழும் ஒடியற்பிட்டும் அமிர்தமென்பர் அதன் சுவையறிந்தோர்.

இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் வாழும் கனடாவில் பத்துக்கு மேற்பட்ட தமிழ் வார மாதப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றில் ஒடியற்கூழ் பற்றிய விளம்பரங்கள் அடிக்கடி வெளியிடப்படுகின்றன. மிகமிகத் தரமான ஒடியல்மா முதல் கறி முருங்கை இலை (ஒரு கிலோ 650 ரூபா), பலாக்கொட்டை, யாழ்ப்பாணம் உப்புக்கடல் உணவுகள் வரை ஒடியற் கூழுக்குத் தேவையான சகல பண்டங்களும் கனேடியக் கடைகளில் விற்பனையாவதைப் பார்த்து அங்கு பெரும்ஆச்சரியமே விளைந்தது. இதன் உண்மை யாதெனில் குடாநாட்டு அசல் சுதேசிகளில் லட்சக் கணக்கானோர் புலம்பெயர்ந்து அங்கு சென்றுவிட்டார்கள் என்பதேயாகும். ஐயகோ பாவம்! இன்றைய யாழ்ப்பாணம்.

### மரவள்ளி மா

யாழ்ப்பாணக் கமக்காரர்கள் அன்னவரும் கோடைகாலங்களில் மரவள்ளிக் கிழங்கைச் சீவிக் காயப்போட்டுக் கொள்வர். மற்றைய கிழங்கு வகைகளிற் பல அப்படியே நீண்ட நாள்கள் சேமிப்பில் இருக்கக் கூடியவை. கழிவு கிழங்குகள் என்று மரவள்ளியில் எவையும் இல்லை. சந்தைப்படுத்த முடியாதவை அனைத்தும் சீவலாகும். மாரி காலங்களில் மரவள்ளி மாப்பிட்டை முன்னோர் சிலாகித்து உட்கொண்டனர். மரவள்ளி மாவுடன் கோதுமை எந்தவகையிலும் போட்டி போட முடியாது. அந்தக் காலத்தில் மரணப் பாடைக்குப் பசை காய்ச்ச மாத்திரமே கோதுமை மா பயன்படுத்தப்பட்டது. எனது மன உறுத்தல் எதுவெனில் மரவள்ளி மா குடாநாட்டில் பிரபல்யம் அடைய முடியாத ஒரு பண்டமல்ல என்பதுதான்.

ஒருசமயம் மருதனார்மடம் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தவேளை கமக்காரர் ஒருவர் பாண் பொதியுடன் திரும்பிக் கொண்டிருந்தார். "சந்தைக்கு என்ன பண்டம் கொண்டுபோகிறீர்கள் பெரியவர்"? என வினவியபோதுமரவள்ளிக்கிழங்கு என்றார். ஐயா கிழங்கு கொண்டு போனார் பாணை வாங்கி வந்தார். இன்றைய யாழ்ப்பாண நடப்புக்களுக்கான ஓர் உதாரணமாக இதை எடுத்துக் கொண்டேன். சந்தைப்படுத்த முடியாத மரவள்ளியைக் கால்நடைகளுக்கு உணவாகக் கொடுப்பது இந்தக் காலம். தத்தம் உணவுத் தேவைகளுக்காகவே விவசாயிகள் தினை, குரக்கன், வரகு, வள்ளிக்கிழங்கு வகைகளைப் பயிரிட்டது அந்தக்காலம். சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களும் பலாக்காய்களை அவித்து உணவாகக் கொண்டது இன்று மறக்கப்பட்ட ஒருவிடயமாகிவிட்டது.

நீற்றுப் பூசனிக்காய், பாகற்காய், கத்தரிக்காய், புளிமாங்காய் போன்றவை அபரிமிதமாக உள்ள போகங்களில் அதாவது கோடைகாலங்களில் அவற்றில் தமக்குத் தேவையான அளவைச் சீவிக் காயப்போட்டு வற்றலாக்கிக் காய்கறிவகைகளுக்குத் தட்டுப்பாடான காலங்களில் பயன்படுத்திய எமது முன்னோர்களின் புத்தி சாதுரியம் நினைவுகூரத்தக்கது.

### புளியில் தன்னிறைவு

யாழ்ப்பாணம் புளியில் தன்னிறைவு உடையதாக விளங்கிய காலம் ஒன்றிருந்தது. மா, பலா ஆகியவைபோல புளிய மரங்களையும் நட்டு வளர்த்துள்ளனர் எமது முன்னோர்கள். உப்பிட்டுப் பதப்படுத்திய புளிப் பானைகள் அடுக்களைகளில் வருடம் முழுவதும் இருப்பில் இருக்கும்.

பரம்பரை பரம்பரையாக வாழைத்தோட்டச் சொந்தக்காரர்களாக விளங்கிய கோப்பாய், நீர்வேலிக் கமக்காரர்கள் கறிவாழைக்காயைப் பால் விட்டு அவித்து இனிப்புச்சுவை சேர்த்துப் பிள்ளைகளுக்கு அதையும் ஒரு மாற்று உணவாகக் கொடுத்த காலம் இன்று ஞாபகப்படுத்தி மகிழத்தக்கது.

### உணவில் உயர்வு தாழ்வு இல்லை

உணவுப் பண்டங்கள் அனைத்தும் உயர்வானவை. அவற்றில் உயர்வு தாழ்வு கற்பிப்பது எல்லாம் அவரவர் மனப்பான்மையை பொறுத்த விடயம். முக்கனிகளைப் போன்று பனம்பழங்களையும் சுவைத்து வாழ்ந்த வரலாறு உடையவர்கள் குடாநாட்டு மக்கள். மேலை நாடுகளில் சோளத்திலிருந்து தயாரிக்கப்படும் விதம் விதமான உணவுப் பண்டங்களுக்கு நல்ல வரவேற்பு உண்டு. தமிழகத்தில் இருபது வகையான தானிய வகைகளை மக்கள் பயன்படுத்துகிறார்கள். அவற்றை ஏற்றுமதியும் செய்கிறார்கள். அமெரிக்காவில் உருளைக் கிழங்கு அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படுவதை அவதானிக்க முடிந்தது. எண்ணெய்த்தன்மை அறவே இல்லாத உருளைக்கிழங்குப் பொரியல்களைக் கவர்ச்சிகரமாகப் பொதி செய்து உள்ளூரில் சந்தைப்படுத்துவதுடன் ஏற்றுமதியும் செய்கிறார்கள்.

### கனடாவில் மரவள்ளி

யாழ்ப்பாணத்தில் ஓமப்பொடி, பகோடா போன்றவற்றைப் பொதிகளில் அடைத்து விற்பனை செய்கிறார்கள் அல்லவா? கனடாவில் இவற்றைப் போன்று உப்புக் காரச்சுவை செறிந்த மரவள்ளிக்கிழங்குப் பொரியல் பொதிகளில் சந்தைப்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்து கனடா போகும் தமிழ்மக்கள் அவற்றைப் பெரு

செல்லப்பா நடராசா

மளவில் வாங்கிவருவதை அவதானிக்க முடிந்தது.

எமது பாட்டியும் பாட்டனும் வாழ்ந்த காலம் யாழ்ப்பாணத்தின் பொற்காலமாகும். அவர்களது வாழ்வு 'தன் கையே தனக்குதவி' என்ற பெருமையுடைத்தது. பால் உற்பத்தியில் கூடத் தன்னிறைவுடன் வாழ்ந்த அவர்கள் மேலதிக பால் வளத்தை தயிரும் மோரும் வெண்ணெயும்நெய்யுமாக்கிக் கொண்டனர். எப்பொழுது கூப்பன் அரிசியிலும் மாவிலும் யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கை வைக்கத் தொடங்கினார்களோ அன்றே அவர்களது வாழ்வு அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டவளின் கதை போலாயிற்று. சித்திரைப் புத்தாண்டு வரும் காலத்தில் எமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளில் சிலவற்றைப் பற்றியாவது சிறிது சிந்திப்போமாக! ★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பகம்

## நோய் தீர்க்கும் மூலிகை

### கறிமஞ்சள்

மஞ்சளானது 'சிஞ்சிபரேசியே' (Zingiberaceae) தாவரகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு மூலிகையாகும். இதனை ஆங்கிலத்தில் 'ரெமெறிக்' (Turmeric) என்றும், சிங்களத்தில் 'கஹா' (Kaha) என்றும் சமஸ்கிருதத்தில் 'ஹரித்ரா' (Haridra) என்றும் அழைப்பர்.

இதன் தாவரவியற் பெயரானது "குக்குமா லொங்கா" அல்லது "குக்குமாடொமெஸ்டிக்கா" ஆகும். இம் மூலிகையானது மருத்துவத் தேவைக்கு மாத்திரமன்றி சாதாரணமாக எல்லா வீடுகளிலும் சமையல் அறைகளில் பாவிக்கப்படுகிறது. இம் மூலிகையின் நிலக் கீழ்த் தண்டுப் (Rhizome) பகுதியே சமையலுக்கும் மருத்துவத்திற்கும் பாவிக்கப்படுகிறது.

இம்மூலிகையில் காணப்படும்இரசாயனப் பதார்த்தங்களாவன: கொழுப்பு, மாப்பொருள், கம்பர், ரெசின் (Resin) குக்குமின் (Curcumin) விரைவாக ஆவியாகும் எண்ணெய் (Volatile Oil), கரோன் (Carrone), குக்குமோன் (Curumnone) என்பன ஆகும்.

மஞ்சளானது பின்வரும் இரசாயன செயற்பாடுகளைக் கொண்டு எமது உடலில் செயலாற்றுகின்றது: —

★ அகற்றுவாயு அகற்றி (Carminative)

★ சமிபாட்டுத் தூண்டி (Digestive)

★ கிருமி கொல்லி

★ உடல் உரமாக்கி

★ இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை

★ முறைவெப்பமகற்றி

மஞ்சளிலிருந்து பெறப்பட்ட எண்ணெயை ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட போது இது பித்தப்பையை சுருங்கி விரியச் செய்து பித்த நீரை அதிகமாக சுரக்கச் செய்தது. (Chologogue) இது மாத்திரமன்றி இது 'ஸ்டஃபைலோ கொக்கஸ்' (Staphylococcus) இனத்தைச் சேர்ந்த பக்ரீறியாக்களைக் கொல்லும் இயல்புடையது எனவே கிருமிகொல்லியாகப் பாவிக்கப்படுகிறது.

★ உடலில் ஏற்படும் கண்டல் காயங்கள், அட்டைக்கடி என்பனவற்றிற்கு மஞ்சள் மாவை நீரில் கரைத்து காயத்திற்கு வெளிப்பூச்சாக, பூசல் வேண்டும்.

★ மஞ்சள்குடிநீர் பசியைத் தூண்டும்.

★ வாந்தி, தலைவலி, மூக்கு நீர் பாய்தல், வீக்கம், புண்களுக்கும் கொடுக்கலாம். (குடிநீராக்கி)

★ சாதத்துடன் மஞ்சளை சேர்த்தரைத்து கட்டிகளின் மீது வைத்துக்கட்ட எளிதில் கட்டிகள் பழுத்து உடையும். அல்லது வேப்பிலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்தும் பூசலாம்.

★ மஞ்சளை எரித்து வரும் புகையை மூக்கால் நுகரும் போது தடிமல், காற்று குடாவில் ஏற்படும் அழற்சி பீனிசம் தணியும்.

★ குப்பிளாய் இலையையும் மஞ்சளையும் அரைத்து எக்சிமா, சொறி, சிரங்கு போன்றவற்றிற்குப் பூசலாம்.

★ மஞ்சள், சுண்ணாம்பு, பொட்டிலுப்பு சேர்த்து அரைத்து சுளுக்கு, கண்டல் காயங்கள், அடிகாயங்கள் போன்றவற்றிற்கு (வெளிப்பூச்சாக) அவ்விடத்தில் பூசலாம்.

இ. மணிவண்ணன்
(சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

★ மஞ்சள் பொடி 550 — 650 மில்லிகிராம் வரை கொடுத்தால்வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி போன்றன தீர்ந்து குடல் வன்மைபெறும்.

★ இளஞ்சூடான பாலுடன் சிறிதளவு மஞ்சளைக் கலந்து கொடுக்க தடிமல் தணியும்.

★ மஞ்சள் மாவை எலுமிச்சம்புளியில் கலந்து மூட்டுகளில் வரும் வீக்கங்களுக்கு பற்றிடலாம். ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பொமனேரியன் கறுப்பு, மண்நிற ஆண், பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. பரமேஸ்வரன் மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (பழைய தபாற் கந்தோர் அண்மை). (75211)

---

குளிரூட்டல் கொம்பிறசர்கள் சகல அளவுகளிலும், மின்சார உபகரணங்கள், வயர்கள் என்பவற்றைநிதான விலையில் பெற்றுக்கொள்ள Sairam, Trading Company இல. 101, Palaly Road, Jaffna. (75202)

---

புதிய பாலை, முதிரை நிலைகள், யன்னல்கள், காஸ் சிலிண்டர் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பூங்கனிச்சோலை. இராமலிங்கம் வீதி, முடமாவடி. யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 2976. (75129)

---

பொமனேரியன் நாய்க்குட்டி, லவ் பேட்ஸ் குருவிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சி.ஞானசேகரம், சாவற்கட்டு, ஆனைக்கோட்டை. [75194]

---

சிக்மா தண்ணீர்ப் பம், குளிர்சாதனப் பெட்டி சிசில், அன்ரனா பைப் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 639, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [75197]

---

புதிய ஆண்களுக்கு உரித்தான லுமாலா துவிச்சக்கர வண்டி ஒன்று விற்பனைக்காக உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு இல. 87, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (75192)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி[Broiler], கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்). [75201]

---

Broilers,Cullbirds இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட), தினமும் பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. இன்று விசேட சேவை. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75143)

---

இறைச்சிக்கோழி(Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து 1 Kg 300/- படி வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (75135)

---

இறைச்சிக்கோழி Broiler மற்றும் கல்பேட்ஸ், சேவல், விறாத்துக்குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். [75078]

## கோழித்தீன் விற்பனை

Prima கோழித்தீன் மூடையாகவும், சில்லறையாகவும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை,(நல்லூர் வீடியோசென்ரர் வளவு). முத்திரைச் சந்தையடி, நல்லூர். [75144]

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் நிரந்தர பிரஜா உரிமை பெற்ற 34 வயது நிரம்பிய லக்கினத்தில் செவ்வாய்க் கிரக பாவம் 66½யும் உள்ள கணக்கியல் பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். திருமணம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று மணமகளை உடன் கனடாவுக்கு அழைத்துச் செல்லும் வாய்ப்பும் உண்டு. மணமகன் வைகாசிமாதம் இலங்கை வருவார். சகல குறிப்புக்களும் உள்ளடக்கமாய் உடன் தொடர்பு கொள்ள: விள. இல-1036, மே/பா உதயன். (75191)

---

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை பெற்று B. Sc. Computer நிரந்தர தொழில் புரியும், 31 வயது நிரம்பிய மிருகசீரிட, 1 ஆம் பாதமுடைய, 2 இல் செவ்வாயுடைய, அழகிய மணமகனுக்கு பெற்றோர் படித்த பண்புமிக்க பட்டதாரி CIMA கணனி கற்ற மணமகளை எதிர்பார்க்கின்றனர். யாழ். வந்து திருமணம் செய்து ஸ்பொன்சரில் அழைத்துச் செல்லும் வாய்ப்பும் உண்டு. உடன் அனைத்து விடயங்களும் குறித்து தொடர்புகளுக்கு விள. இல. 1038, மே/பா உதயன். [75218]

## மணமகன் தேவை

யாழ். இந்துகௌரவ உயர் குல சைவபோசனமுடைய 31 வயது நிரம்பிய செவ்வாய்க்குற்றமுள்ள அழகான பண்புமிக்க பட்டதாரி ஆசிரியைக்கும் 26 வயது நிரம்பிய செவ்வாய்க் குற்றமற்ற அழகான பண்பான பட்டதாரி ஆசிரியைக்கும் தகுதிகள் நிரம்பப்பெற்ற மணமகன்களை பெறோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: விள. இல - 1035, மே / பா உதயன். (75190)

---

U.K இல் வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய Vaccine Control Senior Scientist ஆக பிரித்தானிய அரச நிறுவனத்தில் பணிபுரியும் பட்டதாரியான அழகிய மணமகளுக்கு 32 வயதுக்குட்பட்ட 5'5'' உயரமுள்ள MBBS டாக்டர் அல்லது Chartered Accountant மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 01 - 446496 (75163)

---

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயது நிரம்பிய அச்சுவினி, 8 இல் செவ்வாய், பாவம் 61-ம் உடைய படித்த மெல்லிய சிவப்பு நிறமுடைய சிறு தொழில் புரியும் அழகிய மணப்பெண்ணுக்கு உள்நாட்டில் இருக்கும் தகுதியுடைய மணமகன் தேவை. சைவ போசனம் இருந்தால் விரும்பத்தக்கது. விள. இல. 1039, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [75224]

## கண்டெடுக்கப்பட்டன

பலாலி வீதி ,கரம்பன்,ஊர்காவற்றுறை எனுமிடத்தைச் சேர்ந்த மேரி மாகிறெட் ஜெறாட் என்பவருடைய தே. அ. அட்டை, வி.அ. அட்டை (இல. 091305393), ஒரு தொகைப்பணம் என்பன பேர்சுடன் 08 - 04 - 2000 அன்று கல்வியங்காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொடர்புகளுக்கு- விக்னேஸ்வரன்கடை, கல்வியங்காடு. (சந்தைக்கு அருகில்). (75212)

## தவறிவிட்டது

நாவலடி அரியாலையைச் சேர்ந்த நாகலிங்கம் சின்னராசா என்பவரது தேசிய அ. அட்டை (இல.450341924V), விசேட அ. அட்டை இரண்டும் 05-04-2000 அன்று அரியாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் 64, செம்மணி வீதி, அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். [75187]

---

கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சபாரத்தினம் கலைச்செல்வன் என்பவரது விசேட அ. அட்டை (0902041601), கொ /ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை பாடசாலை அ. அட்டை இரண்டும் 8.4.2000 அன்று தட்டாதெருவிற்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ரேடஸ் இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (75216)

---

செல்வ ஞானபிள்ளை கோகழிநாதன் என்பவருடைய விசேட அ. அ இல. (091046687), உரக் கூ. தா. உரிய அ. அட்டை இல. 1257 28 . 02 .2000 அன்று யாழ். தேசிய சேமிப்பு வங்கிக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். லிங்கம் கூல்பார் அல்லது வசந்தகுமார் இல. 265கிராம சேவையாளர் உரும்பிராய் தெற்கு எனும் முகவரியில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (75210)

## புறொயிலர் விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு; வை. சிவகுமார், இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (75165)

---

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (75119)

## காணி வீடு விற்பனை

சாவகச்சேரி ஸ்ரீரசன ஒழுங்கையில் அமைந்துள்ள 4½ பரப்புடன் கூடிய காணியில் இரு வீடுகள் வளவுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: த. வேலாயுதம், சட்டத்தரணி, சாவகச்சேரி. (சி-11748)

---

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் 10¼பரப்புக் காணியும் பழைய வீடு, வளவு கிணறு போன்ற வசதிகளுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. காணி பகுதி பகுதியாகவும் விற்கப்படும். தரகர் தேவையில்லை. நேரடியான உடன் தொடர்புகளுக்கு: த. வேலாயுதம், சட்டத்தரணி, சாவகச்சேரி. (சி-11777)

## படிவம்

க. பொ. த. (சா/ த) ப் பரீட்சை 1999 டிசெம்பர் பெறுபேறு மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது. விண்ணப்ப முடிவு திகதி 20. 04. 2000 பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.(சி/11763)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்த் தோஷமற்ற பாவம் குறைந்த 40வயது போதனாசிரியருக்கும் 28 வயது செவ்வாய் தோஷமற்ற சகோதரிக்கும் பெற்றோர் பொருத்தமான மணமக்களைத் தேடுகின்றனர். தொடர்பு: கே. கமலா C/o சு. விஜயகுமார் அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (74870)

## தேவை

கோழிகள், ஆடுகள் பராமரித்து, சமையல் செய்யக் கூடிய ஓர் ஆண் / பெண் தேவை. சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும். தங்குவதற்கு வசதியும் உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75162)

---


**T. R. R. O**

**COMPUTER TRAINING CENTER**

4th Cross Street, Jaffna.

T P:- 2416

e-mail trro@diamond. lanka. net

**சித்தியடைந்த பயிலுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்**

10-04-2000 திங்கள் காலை 10.00 மணி சமுகம் வேண்டப்படுகின்றது.

அ. நல்லதம்பி
தலைவர்.

(சி/11755)


---

# இதய அஞ்சலி

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின்

‘நேர்மை நெறி நில்’

எனும் இலட்சினைக்கு ஏற்ப கனிஷ்ட அதிபராக நீண்ட காலம் அயராது உழைத்து கல்லூரியை வளர்த்த பேராசான்.

## சின்னத்தம்பி திருநாவுக்கரசு

அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டுஅன்னராது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரது மாணவர்கள்.

(75227)

---

# நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு ஆறாம் ஆண்டு





**சாமிநாதர் அந்தோனிபபிள்ளை**
(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், ஆயுள்வேத வைத்தியர்)
தோற்றம் 28-11-1917 மறைவு 09-04-1999

**அந்தோனிப்பிள்ளை சிசிலியா**
தோற்றம் 09-04-1915 மறைவு 24-05-1994

ஆண்டவருடைய இரக்கத்தில்
உங்கள் ஆன்மா மகிழ்ச்சியடையக்கடவது
அவருடைய புகழ்ச்சியில் கலக்கம் அடையமாட்டீர்கள்
—சீராக் ஆகமம் 51;37

உங்கள் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

128, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (75220)

'யாழ்ப்பாணத்தைப் பிடிப்போம்' என்ற

# புலிகளின் அறிவிப்பை அரசு கவனத்தில் எடுக்கத் தவறியது!

## ஐ.தே.க. செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்ரல்9

'யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவோம்' என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பகிரங்கமாக அறிவித்திருந்தார். அவரின் அறிவிப்பை அரசாங்கம் கவனத்தில் எடுக்காததே யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைக்கு காரணம் என்று ஐ.தே.கவின் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இதைத் தெரிவித்துள்ளார்.

இன்று யாழ்ப்பாணம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. அன்ரன் பாலசிங்கத்தின் அறிவிப்பு வந்தவுடன் அரசு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிராது.

அரசு யுத்தத்தை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் அரச உயர் அதிகாரிகள் யுத்தத்தை நடத்தினால் தோல்விதான் மிஞ்சும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ-3)



ஆனைக்கோட்டை சாவல்கட்டு மகாத்மா சனசமூகநிலைய பொன் விழா நிகழ்வுகள் சமீபத்தில் இடம்பெற்றன. சண்டிலிப்பாய் பதில் உதவி அரசாங்க அதிபர் கே.மகாலிங்கம் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், பொன் விழா நிகழ்வுகளின்போது கிராம கீதம் இசைக்கப்படுவதை இரண் டாவது படத்திலும் காணலாம். முதலாவது படத்தில் மகாத்மா சனசமூக நிலையச் செயலாளர் கே.குணசேகரன், தலைவர் ரி.விஜயகுமார் மற்றும் சனசமூகநிலைய நிர்வாக சபை உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். (இ)

# மயானம் போன்று காட்சி தரும் பளை அங்கு சென்று திரும்பிய அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

"பளை நகரம் மக்கள் நடமாட்டமின்றி மயானம் போன்று காட்சி அளிக்கின்றது" என்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் வீ.புத்திசிகாமணி தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று பளை நகரத்துக்குச் சென்று திரும்பிய அவர் அங்குள்ள நிலைவரம் தொடர்பாக உதயனுக்கு தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

கிளாலி ஊடாக பளை சென்று திரும்பியுள்ள அவர் அங்குள்ள நிலைமை குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

காலை 9மணிக்கு இங்கிருந்து டிராக்டர்களில் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இராணுவத்தினரின் இரு சென்றிகளைக் கடந்து சென்றோம்.

உள்வீதிகள் வழியாக எமது பிரதேச செயலகத்தை சென்று அடைந்த நாம் கிராம சேவையாளர்களின் உதவியுடன் உணவுப் பொருள்களை இறக்கினோம்.

பளைப்பிரதேசத்தில் தற்பொழுது வண்ணான்கேணி, கத்தாப்பு, சோரன்பற்று, மாசார், சின்னத்தாளையடி, முள்ளியடி போன்ற பகுதிகளில் 789 குடும்பங்களைச் சேர்ந்த 3000 பேருக்கும் அதிகமானவர்கள் இருக்கிறார்கள்.

பளை வைத்தியசாலையில் மருந்து பொருள்கள் எதுவும் இல்லை. அங்கு ஒரு டாக்டர் மட்டுமே கடமையில் இருக்கிறார்.

பளை நகரில் சாப்பாட்டுக் கடை ஒன்றும் பலசரக்குகடை ஒன்றும் திறந்திருக்கக் காணப்பட்டன. அத்துடன் மூன்று தொலைத்தொடர்பு நிலையங்களும் இயங்கி வருகின்றன.

மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. வீதிகளில் ஒரு சிலரை மட்டுமே காணமுடிந்தது.

பளைப்பிரதேச செயலகத்தை பொறுத்தவரையில் நான்கு கிராம சேவையாளர்கள் மட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் பொறுப்பில் நாம் கொண்டுசென்ற பொருள்களை ஒப்படைத்து விட்டுத் திரும்பினோம்.

நான் அங்கு ஒருமணித்தியாலம் வரையே தங்கிருந்தமையால் பொதுமக்கள் எவரையும் சந்திக்க முடியவில்லை - இப்படி அவர் கூறினார். (உ-3-5)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி புதிய அதிபராக வண. அரியரட்ணம் அன்ரனிபோல் பதவியேற்ற வைபவம் அண்மையில் இடம்பெற்றது. படத்தில் இடமிருந்து வலமாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் துறையின் பீடாதிபதி கலாநிதி அ.சண்முகதாஸ், புதிய அதிபர் வண. அரியரட்ணம் அன்ரனிபோல், திருமதி போல், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.

*(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர் எஸ்.ரமேஸ்)*

வடமராட்சி கிழக்கு, பளைப் பகுதிகளிலிருந்து

# ஆயிரத்து 674 குடும்பங்கள் இதுவரை இடம்பெயர்ந்தன

அண்மையில் வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் ஆரம்பமான 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு மற்றும் பளைப் பகுதிகளில் இருந்து மொத்தம் ஆயிரத்து 674 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 933 பேர் இதுவரை இடம்பெயர்ந்துள்ளனர் என்று யாழ். செயலக புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

பளை உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து 975 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 656 பேரும், மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து 699 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 277 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதுவரை இடம்பெயர்ந்தவர்களில் 570 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலும் ஆயிரத்து 104 குடும்பங்கள் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக 3 நாள் சமைத்த உணவு வழங்கப்பட்டதாகவும் - தொடர்ந்து அவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் - செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்தவர்கள் பருத்தித்துறையில் உள்ள 4 நலன்புரி நிலையங்களிலும் மருதங்கேணியில் ஒரு நலன்புரி நிலையத்திலும் தென்மராட்சியில் ஒன்பது நிலையங்களிலும் யாழ்ப்பாணத்தில் ஒரு நிலையத்திலுமாக மொத்தம் 15நலன்புரிநிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி மற்றும் பளைப் பகுதிகளில் இடம்பெயர்ந்தவர்கள் போக பெருமளவான மக்கள் தற்போதும் அங்கு தங்கியிருப்பதாக அந்தப் புள்ளிவிவரங்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.

பளை உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து ஆயிரத்து 879 குடும்பங்களும், மருதங்கேணி உதவி அரசஅதிபர் பிரிவிலிருந்து ஆயிரத்து 148 குடும்பங்களும் இடம்பெயர முடியாது தொடர்ந்தும் தங்கியுள்ளன என்று அந்தப் புள்ளிவிவரங்கள் மூலம் அறியமுடிகின்றது.(இ-9)

# சிறையிலுள்ள இந்திய மீனவரை ஈ.பி.டி.பி. குழு சந்தித்தது

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

யாழ்ப்பாணச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பத்து தமிழக மீனவர்களையும் ஈ.பி.டி.பியின் சாவகச்சேரி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்ஸாண்டர் தலைமையிலான குழு நேரில் சென்று பார்வையிட்டது.

இவர்களுக்கான உடுதுணிகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் போன்றவை ஈ.பி.டி.பியினரால் வழங்கப்பட்டன.

இந்த மீனவர்களின் விடுதலை தொடர்பாகவும், இந்தியாவிலுள்ள அவர்களது குடும்பத்தினருடன் அவர்கள் தொடர்புகளை ஏற்படுத்தவும் ஒழுங்குகளைச் செய்து தருவதாக ஈ.பி.டி.பியினர் அவர்களிடம் உறுதியளித்தனர்.

மனிதகௌரவத்துக்கான மன்றத்தின் வடபிராந்திய இணைப்பாளர் ஐ.சிவராசாவும் இவர்களுடன் சிறைச்சாலைக்குச் சென்று இந்திய மீனவர்களைச் சந்தித்தார். (இ-5-9)

# அரியாலையில் 20ஆம் திகதி நடமாடும் செயலக சேவை

வலி.வடக்கு,ஏப்ரல்9

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் முதலாவது நடமாடும் பிரதேச செயலர் பிரிவுசேவை அரியாலையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் காலை 9-30 மணி முதல் இச்சேவை இடம்பெறும். இச்சேவையில் சுமார் 23 திணைக்களங்கள் கலந்துகொள்கின்றன. குறிப்பாக தேசிய அடையாள அட்டைப் பிரிவு, விசேட அடையாள அட்டைப் பிரிவு, மின்சாரசபை, விவசாயத் திணைக்களம், பிறப்பு இறப்பு, விவாகப் பதிவாளர் திணைக்களம், ரெலிக்கொம் நிறுவனம், புனர்வாழ்வுத் திணைக்களம் உட்பட மாநகர சபை, பிரதேச சபை, தேசிய வீடமைப்புத் திணைக்களம், தபால் திணைக்களம், சுகாதாரத்திணைக்களம், தென்னை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம், கூட்டுறவுத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கைத்தொழில் திணைக்களம் உட்பட மற்றும் பல திணைக்களங்களும் கலந்து கொள்ளவுள்ளன.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கான இச்சேவையை இலகுபடுத்துமுகமாக பொதுமக்கள் தமக்குள்ள பிரச்சினைகளை முன்கூட்டியே தமக்கு அறிவிக்கும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

மக்கள் இடம்பெயர்ந்த கிராம அலுவலர் பிரிவுகளான பூம்புகார், மணியந்தோட்டம் உட்பட மற்றும் ஜே-89, ஜே-90, ஜே-91, ஜே-92, ஜே-93,ஜே-94, ஜே-95, ஜே-96 ஆகிய கிராம அலுவலர்பிரிவு மக்கள் எழுத்து மூலம் தமது பிரச்சினைகளை அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)


மிற்சுயி (MITSUI), அற்லஸ் (ATLAS)
சிமெந்து விலை மாற்றம்

இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டத்தின்போது பொருள்கள் சேவைகள் வரி (G.S.T) சிமெந்துக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் மிற்சுயி (MITSUI), அற்லஸ் (ATLAS) சிமெந்தின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

*புதிய மொத்த விலை*

மிற்சுயி (MITSUI) - 555/- (ஆகக்குறைந்தது 200 பக்கற்றுக்கள்)
அற்லஸ் (ATLAS) - 530/- (ஆகக்குறைந்தது 200 பக்கற்றுக்கள்)

குறிப்பு:-

❊ ரோக்கியோ சிமெந்து கம்பனியின் மிற்சுயி (MITSUI), அற்லஸ் (ATLAS) சிமெந்துகள் சர்வதேச அங்கீகாரம் பெற்றவை (ISO)
❊ பிரித்தானிய தரத்திற்கு அமைவானது (BSS)
❊ இலங்கைத் தரக்கட்டுப்பாட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டது (SLS)

மேலதிக விவரங்களுக்கு:-

ஜெசிபா ஏஜென்சி,
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T/Phone 2407 Fax: 2140




(C/1714)

# யுத்தப் பிரதேசங்களில் உள்ள மக்களை வெளியேற்ற உடன் நடவடிக்கை எடுங்கள்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கும் மகஜர்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

யுத்தப் பிரதேசங்களில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற உடன் நடவடிக்கை எடுங்கள். அவ்வாறு வெளியேற்றுவதில் உங்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் இருப்பின், அதை சர்வதேச சமூகங்களின் கவனத்துக்கு கொண்டு வாருங்கள்.

மேற்கண்டவாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட மகஜர்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜர்களில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது யுத்தம் நடை பெற்று வரும் பிரதேசங்களான மாசார், சோரன்பற்று, வண்ணான்கேணி, சின்னத்தாளையடி, தர்மக்கேணி மற்றும் தம்பகாமம் பகுதிகளில் மக்கள் சிக்குண்டுள்ளனர்.

யுத்தப் பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் வெளியேற இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

அங்குள்ள மக்களின் நிலை பற்றி எந்தவித தகவலையும் அறிய முடியாதுள்ளது. இப்பிரதேசங்கள் மருத்துவ வசதிகளோ ஏனைய வசதிகளோ அற்ற பகுதிகளாகும். அதனால் அவர்கள் மிகுந்த ஆபத்தான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அங்குள்ள மக்களை இராணுவம் மனித கேடயங்களாகப் பயன்படுத்தலாம் என உறுதிப்படுத்தப்படாத சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மகஜர் மூலம் உங்களிடம் நாங்கள் கேட்டுக்கொள்வதாவது:-

* யுத்தப்பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச்செல்ல உடன் நடவடிக்கை எடுக்கவும்.
* ஜெனீவா உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று யுத்தத்தின்போது பொது மக்கள் தாம் விரும்பிய பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும் உரிமையை இராணுவம் மதித்து நடக்கும் வகையில் வலியுறுத்தவும்.

எங்கள் வேண்டுகோள் புறக்கணிக்கப்படும் பட்சத்தில் எமது போராட்டத்தைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை. யுத்தப்பிரதேசத்தில் சிக்குண்டு உள்ளவர்களை மீட்பதற்கு உங்களால் முடியாத பட்சத்தில் இற்றை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் கூறுங்கள் - என்றுள்ளது.

(இ-9-ரி)

## இடம்பெயர்ந்தோர் விவரம் படையினரும் திரட்டுகின்றனர்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சியின் பல்வேறு நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ளவர்களின் பெயர் விவரங்களை இராணுவத்தினர் திரட்டி வருகின்றனர்.

மிருசுவில் சென்.நீக்கிலஸ் தேவாலயத்துக்கு நேற்றுமுன்தினம் காலை சென்ற இராணுவத்தினர் அங்கு தங்கியுள்ளவர்களின் விவரங்களைத் தருமாறு கேட்டுப் பெற்றுள்ளனர் எனத் தெரியவந்தது.

இதேவேளை -

மிருசுவில் - தவசிக்குளம் காணிக்கை மாதா கோயிலில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. (ஐ-7-5)

### தவறுதலாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குப் பிரதேசசபைத் தலைவர் ந.திரிலோகநாதன் ஆகியோர் மண்டபத்தைவிட்டு வெளியேறியபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வெளியே காவலுக்கு நின்ற சிப்பாய் ஒருவரே ஒரு சில நிமிடங்கள் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். அவரது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததனால் அவ்வாறு நிகழ்ந்ததாகப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது பிரதேசசபைத் தலைவரும் கட்டளை அதிகாரியும் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் கூறப்படுகிறது.

(இ-6)

### சனி அரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள், ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் ஆர். தர்மலிங்கம் இதில் கலந்து கொண்டு தொழிற்சட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் முடிவுகள் வருமாறு:-

* யாழ். மாவட்டத்தில் தொழில் நீதிமன்றம் ஒன்றை இயங்கச் செய்ய நடவடிக்கை எடுத்தல்.
* தொழிலாளர்களுக்கு சேமலாபநிதி வழங்கல், விடுமுறை வழங்கல் போன்றவை தொடர்பாக வர்த்தகர்களுக்கு விளக்கமளித்தல்.
* வர்த்தக சங்கங்களில் அங்கம் வகிக்காத வர்த்தக நிறுவனங்களைச் சங்கத்தில் இணைத்தல்.

(இ-3)

### தவறவிட்ட அ.அட்டை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

கைதடி மகாவித்தியாலய மாணவன் துரைசிங்கம் வெங்கடேஎஸ்வரா என்பவரால் தவற விடப்பட்ட அவரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு 'உதயன்' பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அலுவலக நேரத்தில் அதனை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

### உயிர் தப்பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் அமைந்திருந்த புலிகளின் தளங்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த சமயம் அவை மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் அவை சேதமடைந்தன என்றும் -

படகுகளில் இருந்த கடற்படையினரில் பெரும்பாலானவர்கள் மீட்கப்பட்டு விட்டனர் என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

கடற்கரையோரப் பிரதேசத்தினை நெருங்கி வந்து மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்திய டோறாப் படகுகள் மீது கடற்புலிகளின் விசேட அணிகள் பீரங்கிகள் மூலம் தாக்குதல் நடத்தியதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலை அடுத்து இரு டோறாப் படகுகளும் தீப்பற்றி எரிந்து பின்னர் கடலில் மூழ்கிவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### பல்கலைக்கழக ஊழியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் அவசரக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவது பற்றியும், பல்கலைக்கழக மாணவர் போராட்டம் தொடர்பாக, ஊழியர்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (இ-5)

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உதவும்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9

குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்களின் குடும்பங்களில் உள்ள பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு ஒரு தொகைப் பணத்தை உதவித் தொகையாக வழங்க யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்வந்துள்ளது.

இதற்கான புள்ளிவிவரங்களைச் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களில் இருந்து உடனடியாய் பெற்றுத் தருமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்திடம் கோரியுள்ளதாகச் சங்கச்செயலாளர் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

### இடம்பெயர்ந்த மக்களுக்கு உடு புடைவை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.9

வடமராட்சி கிழக்கு மற்றும் பளைப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வழங்குவதற்குப் பொதுமக்களால் உடுபுடைவைகள் வழங்கப்பட்டு வருவதாக யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட உடுபுடைவைகளில் ஒரு தொகுதி சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறையில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-10)

### தவக்கால யாத்திரை நிகழ்வு

குருநகர்,ஏப்ரல்9

யூபிலி 2000ஆம் ஆண்டுக்கான தவக்கால யாத்திரை இன்று பற்றிமா மாதா ஆலயத்தில் நடைபெற உள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு செபமாலைத் தியானத்துடன் ஆரம்பமாகி நற்கருணை எழுந்தேற்றம், ஒப்புரவு வழிபாடு, குணப்படுத்தும் வழிபாடு, நற்கருணை ஆசீர், சிலுவைப் பாதை, திருப்பலி, யூபிலி ஆண்டின் அப்போஸ்தலிக்க ஆசீரோடு நிகழ்வுகள் பிற்பகல் 4.30 மணிக்கு நிறைவுபெறும்.

(இ-51)


- அதிசயப் புனிதன் -

அமரர் சிவதொண்டர் ஏரம்பு தம்பு ஐயா

அதிசயப் புனிதன் ஐய!
சாக்கடைக்குள் மனம் புதைத்து
சந்தனத்தில் உடல் குளித்து
நாக்குடைய நல்லோர் மனமுடைத்து
பூத்தறித்து பூசைதனை புண்ணியமென்னும்
பேய்ச்சாமிகள் புடைசூழ – பச்சை
பிள்ளைபோல் உள்ளத்தால் சிரிப்பால்
முதிர்ந்த வயதில் இளைஞனின் உழைப்பால்
மழிக்காமலும், நீட்டாமலும் – காவிக்குள்
போலிச்சாமியெதனையும் ஒழிக்காமலும்
கருணைச்சிரிப்போடும், உபசரிப்போடும்
வெறுமை வாழ்வினை வெட்டவெளிதனிலே
வாழ்ந்ததெப்படி? நீ அதிசயப்புனிதன்தான்!
நீ மறைந்து போகலாம்,
மறந்து போக முடியாது – சிவதொண்டனின்
திருநீறாய் பூசப்படுவாய் – உண்மைத் தொண்டரால்
பேசப்படுவாய்!
அங்கு வீசும் அருள்காற்றாய் வீசப்படுவாய்!

'போஸ்கோ'

நல்லூர். (C/11773)



நாளை ஆரம்பம்

விக்னா கல்வி நிறுவனம்

பிரிவு 2

O/L DAY CLASS

ஆரம்பம்: 10–04–2000 (8.30–2.00)

- யாழ்நகரில் 28ஆவது வருட சேவையில் மிளிரும் ஒரே நிறுவனம்.
- கடமை கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
- தூர இடத்து மாணவர்கள் நலன்கருதி தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

(75178)



உ

சிவமயம்

புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித் திங்கள் 28ஆம் நாள் 10–04–2000 திங்கட்கிழமை முற்பகல் 10.40 மணிமுதல் 12.15 மணிவரையுள்ள மிதுனலக்கினம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள

★ சிங்கப்பூர் ஜுவல்லறி ★

★ Sinkapoore Jewellery ★

இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில்

மிகவும் மங்களகரமாக ஆரம்பமாகவுள்ளதை அனைத்து அன்பர்களுக்கும். வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

சிங்கப்பூர் ஜுவல்லறியினர்

இல.93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/11761)



SALE! SALE!! SALE!!!

மாபெரும் மலிவு விற்பனை!

யாழ். சீமாட்டியின்

புத்தாண்டு மலிவு விற்பனை!

அனைத்து ஐவுளித் தினுசுகளும்
என்றும் எங்கும் கிடைக்காத விசேட கழிவு விலையில்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

* மொத்த விலையிலேயே சில்லறை விற்பனை
* வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

சீமாட்டி புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மங்கை சில்க்
15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (C/11646)

T.P. :- 2196
FAX :- 2102



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.